Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 293

செவ்வாய்க்கிழமை
16 செப்ரெம்பர் 2025

ஆவணி 31 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

பக்கங்கள் – 12
விலை – ரூபா 50



## கொழும்புக்குத் திரும்ப எண்ணவில்லை மஹிந்த

கொழும்பு. செப். 16
முன்னாள்ஜனாதிபதிமஹிந்த மீண்டும் கொழும்புக்குத் திரும்புவதற்கு எண்ண வில்லை என்று ஸ்ரீலங்கா 11

நேற்று மிகவும் உணர்வுபூர்வமாக

# தியாகதீபம் திலீபனின் நினைவேந்தல் ஆரம்பம்



யாழ்ப்பாணம், செப்ரெம்பர் 16
இந்தியாவிடம் ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன் வைத்து, உணவுத் தவிர்ப்பில் ஈடுபட்டுஉயிர்துறந்ததியாகதீபம் திலீபனின் 38ஆவது நினைவேந் தல் நிகழ்வுகள் தமிழர் தாயகத் தில் நேற்றுப் பரவலாக உணர் வெழுச்சியுடன் ஆரம்பமாகின. 11




## திலீபனின் தியாகப்பயணம் நல்லூரில் ஆவணக்காட்சி!

யாழ்ப்பாணம், செப். 16
ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்னிறுத்தி அகிம்சை வழியில் உணவுத் தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு தன் னுயிரை ஆகுதியாக்கிய தியாகதீபம் திலீபனின் 38ஆவது நினைவேந்தலை முன்னிட்டு 11

வரவு - செலவுத் திட்டத்துக்கான

## ஒதுக்கீட்டுச் சட்டவரைவு செப்ரெம்பர் 26 சமர்ப்பிப்பு

கொழும்பு, செப். 16
2026ஆம் ஆண்டுக்கான வரவு -செலவுத் திட்டத்துக் குரிய ஒதுக்கீட்டுச் சட்ட வரைவு செப்ரெம்பர் மாதம் 26ஆம் திகதி நாடாளுமன் றத்தில் முன்வைக்கப்பட வுள்ளது. இது வரவு - செல வுத் திட்டத்தின் முதலாம் வாசிப் 11

மாகாணசபைகளுக்கான

## தேர்தல் பிற்போனமைக்கு ஜே.வி.பி.யும் காரணம்!

பெரமுன குற்றச்சாட்டு

கொழும்பு, செப். 16
மாகாணசபைத் தேர்தல் கள் பிற்போனமைக்கு ஜே.வி.பி.யும் பிரதான காரணம் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலர் சாகர காரிய வசம் குற்றஞ்சாட்டியுள் ளார்.
கொழும்பில் 11

## கட்சிகள் ஒத்துழைத்தால் விரைவில் மாகாணத் தேர்தல்

விரிவு பக்கம்:- 02

## 'லஞ்ச்சீற்' பயன்பாட்டுக்கு பருத்தித்துறையில் தடை

பருத்தித்துறை நகரசபை அதிரடி

யாழ்ப்பாணம், செப். 16
பருத்தித்துறை நகர சபைக்கு உட்பட்ட உண வகங்களில் ஒக்ரோபர் மாதம் முத லாம் திகதி 11



## தென்னிலங்கை மீனவர்களுக்காகத்தான் பருத்தித்துறை துறைமுகம் அபிவிருத்தி

அந்தப் பகுதி மீனவர்கள் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், செப். 16
பருத்தித்துறை துறைமுகத் தில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்திப் பணிகளால், உள்ளூர் மீனவர்களுக்கு எந்த நன்மையும் ஏற்படப் போவதில்லை. தென்னி லங்கை மீனவர்களின் நலன்களைக் கருத்திற் கொண்டே இந்த அபி விருத்தித் திட்டம் மேற் கொள்ளப்படுகின்றது என்றுஉள்ளூர்மீனவர்கள் குற்றஞ்சாட்டி யுள்ளனர். 11

சிறைக்கைதிகள் தினத்தை முன்னிட்டு

## தமிழ் அரசியற்கைதிகளுடன் குடும்பத்தினர் சந்திப்பு

யாழ்ப்பாணம், செப். 16
நீண்டகாலமாகச் சிறைச் சாலைகளுக்குள் வாடிவ ரும் அரசியற்கைதிகளை அவர்களின் உறவினர் கள் நேற்றுமுன்தினம் சந் தித்துள்ளனர்.
தேசிய சிறைக்கைதிகள் தினம் செப்ரெம்பர் மாதம் 12ஆம் திகதி கடைப்பிடிக் கப்படுகின்றது. குறித்த தினத்தை முன்னிட்டு நேற்றுமுன்தினம் ஞாயிற் றுக்கிழமை இந்தச் சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள் ளது. தமிழ் அரசியற்கைதி ஆனந்த சுதாகரனின் தாயார் மற்றும் பிள்ளை கள், 28 வரு டங்களாகச் 11

### முச்சந்தி முரளி

'சட்டம் போட்டு தடுக்கிற கூட்டம் தடுத்தாலும் திட்டம் போட்டு மீறுறவை மனம் மாறாட்டி லஞ்ச் சீற்றையும் ஒழிக்கேலாது கண்டியளோ'

யாழ்ப்பாணத்தில்

## ஹெரோய்னுடன் மூவர் கைது!

யாழ்ப்பாணம், செப். 16
யாழ்ப்பாணம் பொம்மைவெளிப் பகுதி யில் போதைமாத்திரைகள் மற்றும் ஹெரோய்னை 11

## உறுமிய மோ.சைக்கிள்களை உருட்ட வைத்த பொலிஸார்!



வவுனியா, செப். 16
வவுனியாவில், பொதுமக்களுக்கு அச்சத் தையும் அசௌகரியத்தையும் ஏற்படுத் தும் வகையில், அதிக சத்தத்துடன் வேக மாகப் பயணித்த மோட்டார் சைக்கிள்கள் பொலிஸாரால் 11

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கொவிசெத**
திகதி 15.09.2025
சீட்டிழுப்பு இலக்கம் 4195
ஆங்கில எழுத்து Z
வெற்றி இலக்கங்கள் 30 46 68 78
விசேட எழுத்து Z

**ஹந்தஹன ராசி சுப பலன்**
திகதி 15.09.2025
சீட்டிழுப்பு இலக்கம் 1262
வெற்றி இலக்கினம் ரிஷபம்
வெற்றி இலக்கங்கள் 10 27 48 61

**NLB ஜய**
திகதி 15.09.2025
சீட்டிழுப்பு இலக்கம் 0221
ஆங்கில எழுத்து J
வெற்றி இலக்கங்கள் 0 1 8 1

**மெகா பவர்**
திகதி 15.09.2025
சீட்டிழுப்பு இலக்கம் 2301
ஆங்கில எழுத்து P
சுப்பர் இலக்கம் 11
வெற்றி இலக்கங்கள் 32 41 55 80

**மஹஜன சம்பத**
திகதி 15.09.2025
சீட்டிழுப்பு இலக்கம் 5953
ஆங்கில எழுத்து K
வெற்றி இலக்கங்கள் 5 1 4 0 7 6

**தன நிதானய**
திகதி 15.09.2025
சீட்டிழுப்பு இலக்கம் 1983
ஆங்கில எழுத்து K
வெற்றி இலக்கங்கள் 10 19 52 71
விசேட எழுத்து K

**அத சம்பத**
திகதி 15.09.2025
சீட்டிழுப்பு இலக்கம் 0528
ஆங்கில எழுத்து K
வெற்றி இலக்கங்கள் 4 0 7 6

**சுப தவசக்**
திகதி 15.09.2025
சீட்டிழுப்பு இலக்கம் 0069
வெற்றி இலக்கினம் மேஷம்
வெற்றி இலக்கங்கள் 18 39 40 44

# கட்சிகள் ஒத்துழைத்தால் விரைவில் மாகாணசபைத் தேர்தல்

## அமைச்சர் சந்தன அபேரத்ன தெரிவிப்பு

**கொழும்பு, செப்.16**

**நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் சகல அரசியற்கட்சிகளும் ஒத்துழைப்பு வழங்கினால், மாகாண சபைத் தேர்தலை விரைவாக நடத்தலாம். எதிர்வரும் மாதமளவில் முதற்கட்டப் பேச்சில் ஈடுபடத் தயாராகவுள்ளோம் என்று மாகாணசபைகள், உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் பொதுநிர்வாக அமைச்சர் சந்தன அபேரத்ன தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

மாகாணசபைத் தேர்தலை விரைவாக நடத்தவேண்டும் என்ற நிலைப்பாட்டில் உறுதியாகவுள்ளோம். மாகாணசபைகள் மக்கள் பிரதிநிதிகள் இல்லாமல், அரச அதிகாரிகளால் நிர்வகிக்கப்படுவது ஜனநாயக அம்சங்களுக்கு அப்பாற்பட்டது என்பதையும் ஏற்றுக்கொள்கிறோம்.

மாகாணசபைத்தேர்தல் முறைமையில் காணப்படும் சட்டச்சிக்கலுக்குத் தீர்வு கண்டதன் பின்னர், தாமதமில்லாமல் மாகாணசபைத் தேர்தலை நிச்சயம் நடத்துவோம். தேர்தலைப் பிற்போடும் நோக்கம் எமக்குக் கிடையாது. நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் சகல அரசியற்கட்சிகளுடனும் எதிர்வரும் மாதமளவில் முதற்கட்ட பேச்சில் ஈடுபடத் தயாராகவுள்ளோம். சகல தரப்பினரும் ஒருமித்த நிலைப்பாட்டுக்கு வந்தால், மாகாணசபைத் தேர்தலை விரைவாக நடத்தலாம். பொதுவான கொள்கைக்கு அமைய தீர்மானமொன்றை எடுப்பதற்கு அனைவரும் ஒத்துழைக்கவேண்டும்-என்றார். (எ-க-இ)

**சுபிரி தன சம்பத**
திகதி 15.09.2025 | தினம் திங்கட்கிழமை
வெற்றி வாரம் 0661
ஆங்கில எழுத்து M
வெற்றி இலக்கம் 2 7 4 8 6 9

**Super Ball DLB**
திகதி 15.09.2025 | தினம் திங்கட்கிழமை
சீட்டிழுப்பு வாரம் 2927
ஆங்கில எழுத்து Z
வெற்றி இலக்கம் 06 33 74 76

**சனிதா DLB**
திகதி 15.09.2025 | தினம் திங்கட்கிழமை
ஆங்கில எழுத்து L
வெற்றி இலக்கம் 06 27 45 80
வெற்றி வாரம் 5088

**லக்ன ராசி DLB**
திகதி 15.09.2025 | தினம் திங்கட்கிழமை
சிம்மம்
வெற்றி இலக்கம் 37 45 58 61
சீட்டிழுப்பு வாரம் 4639

**KAPRUKA DLB**
திகதி 15.09.2025 | தினம் திங்கட்கிழமை
ஆங்கில எழுத்து Y
சுப்பர் இலக்கம் 01
வெற்றி இலக்கம் 29 38 40 65
வெற்றி வாரம் 2103

**அத கோடிபதி DLB**
திகதி 15.09.2025 | தினம் திங்கட்கிழமை
ஆங்கில எழுத்து L
வெற்றி இலக்கம் 19 41 46 54
வெற்றி வாரம் 2753

**JAYODA DLB**
திகதி 15.09.2025 | தினம் திங்கட்கிழமை
ஆங்கில எழுத்து G
வெற்றி இலக்கம் 22 26 41 51
வெற்றி வாரம் 2161

# மக்களை ஏழையாக்கியவர் மஹிந்த!

கொழும்பு, செப்.16

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் ஆட்சியில் அரசாங்கத்தின் ஆதரவுடன், பல ஊழல் மோசடிகள் இடம்பெற்றன. ஆனால் அவர் அதற்கெதிராக எந்த நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை. ஊழல்வாதிகளைச் செல்வந்தர்களாக்கினார். நாட்டு மக்களை ஏழையாக்கினார்.

இவ்வாறு தேசிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தேவானந்த சுரவீர தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச போருக்குத் தலைமை தாங்கினார் என்பதை ஏற்றுக்கொள்கிறோம். ஆனால் போர் வெற்றியைக் குறிப்பிட்டு, மக்களின் வரிப்பணத்தின் ஊடாக, முழுக் குடும்பத்தையும் வளப்படுத்திக்கொள்ள முயற்சிப்பது எந்தளவுக்கு நியாயமாது. இவர் போருக்குத் தலைமை தாங்கியதைப் போன்று, நாடு வங்குரோத்து நிலைய டைவதற்கும் தலைமைதாங்கினார் என்பதை நாட்டு மக்கள் மறக்கப்போவதில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (எ-க-இ)

# சபாநாயகருக்கு எதிராக எதிர்க்கட்சி போர்க்கொடி

சபாநாயகரின் ஒரு தலைப்பட்சமான செயற்பாட்டுக்கு எதிராக, சர்வதேச நாடாளுமன்ற ஒன்றியத்திடம் முறையிடுவோம் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜயவர்தன தெரிவித்துள்ளார்.

குற்றச்சாட்டுக்கு உள்ளாக்கப்பட்ட நபர் பாதுகாப்புப் பிரதி அமைச்சராகப் பதவி வகிக்கும்போது, உயிர்த்த ஞாயிறு தினக் குண்டுத்தாக்குதல்கள் தொடர்பில் எவ்வாறு சுயாதீன விசாரணைகள் மேற்கொள்ளப்படும்? இவற்றை அடிப்படையாகக் கொண்டு, பாதுகாப்புப் பிரதி அமைச்சர் அருண ஜயசேகரவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டுவந்தோம்.

போலியான காரணிகளைக் குறிப்பிட்டு, நம்பிக்கையில்லாப் பிரேரணையை சபாநாயகர் புறக்கணித்துள்ளார். நடுநிலையாகச் செயற்படவேண்டிய சபாநாயகர், சபை முதல்வர் பிமல் ரத்நாயக்கவின் அறிவுறுத்தல் மற்றும் ஆலோசனைக்கு அமைவாக ஒருதலைப்பட்சமாக செயற்படுகின்றார் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-க-இ)

# விவசாயம் அழிவடைந்தால் நாட்டில் வறுமை நிச்சயம்



## எச்சரிக்கிறார் சஜித் பிரேமதாஸ

கொழும்பு,செப்.16

நாட்டில் விவசாயம் அழிவடைந்து வருதால், எதிர்காலத்தில் வறுமை உருவாகி, பல கடுமையான பிரச்சினைகளை நாம் சந்திக்க நேரிடும். அதனால் இந்தப்பிரச்சினைகளுக்கு குறுகிய காலத்துக்குள் பதில்களைத் தேடவேண்டியது அவசியமாகும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ வலியுறுத்தியுள்ளார்.

இன்று நாட்டில் விவசாயம் செய்வது கடினமானதாக மாறிவிட்டது.

விவசாயிகள் கடுமையான பிரச்சினைகளை எதிர்கொண்டு, சிரமங்களுக்கு மத்தியில் விவசாயம் செய்து வருகின்றனர். நெல் அறுவடைக்கு உத்தரவாத விலை கிடைக்காத நிலை காணப்படுகின்றது. நாட்டில் பணம் இல்லாமல், நுகர்வு, உற்பத்தி மற்றும் ஏற்றுமதிகள் குறைந்துள்ளன.

2028 முதல் ஆண்டுதோறும் டொலர் 5.6 பில்லியன் டொலர் கடனை அடைக்க பொருளாதார வளர்ச்சி விகிதத்தை 5 சதவீதமாக பேணிச் செல்லவேண்டும். ஆனால் அது நடக்கவில்லை. இந்தப் பிரச்சினைகளுக்கு பதில்களைத் தேடவேண்டியுள்ளது.

தேர்தல் காலங்களில் வாக்குகளைப் பெறுவதற்காக விவசாயிகளை ஏமாற்ற முயற்சிக்கின்றனர். ஆனால் ஐக்கிய மக்கள் சக்தி விவசாயிகளைப் பாதுகாக்க முன்நிற்கும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார். (எ-க-இ)

# ஜனநாயகத்துக்கு விரோதமாக அடக்குமுறையில் அரசாங்கம்

## ஐக்கிய மக்கள் சக்தி குற்றச்சாட்டு

கொழும்பு,செப்.16

நாடாளுமன்றத்துக்கு அப்பால், ஜனநாயகத்துக்கு விரோதமாக அடக்குமுறைகளைக் கையாள்கின்றது அரசாங்கம் . அதற்கெதிராக நாம் தொடர்ந்தும் போராடுவோம். அரசியல் ரீதியாக ஏனைய கட்சிகளுடன் கொள்கை ரீதியான முரண்பாடுகள் காணப்பட்டாலும், இவ்வாறான செயற்பாடுகளில் இணைந்து செயற்பட முயற்சிக்கின்றோம் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷண ராஜகருணா தெரிவித்துள்ளார்.

நாட்டில் ஜனாதிபதியொருவர் ஓய்வுபெற்ற பின்னர் சில சிறப்புரிமைகள் வழங்கப்படவேண்டும். ஆனால் அவை வரையறுக்கப்பட்டவையாக இருக்கவேண்டும். நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான ஓய்வூதியத்தை நீக்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டால், தேவையானோருக்கு அதற்கு விண்ணப்பிப்பதற்கான வாய்ப்பு வழங்கப்பட வேண்டும். எதிர்க்கட்சிகள் உட்பட யார் கூறுவதையும் கேட்காமல் எதேச்சதிகாரப் போக்கிலேயே அரசாங்கம் செயற்பட்டுக்கொண்டிருக்கின்றது என்று அவர் குற்றஞ்சாட்டியுள்ளார். (எ-க-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பாதாள உலகக்குழுக்களின் ரூ.500 கோடி சொத்து முடக்கம்

## அமைச்சர் ஆனந்த விஜயபால தெரிவிப்பு

கொழும்பு, செப்.16

**இந்த ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் சுமார் 500 கோடி ரூபா பெறுமதியான சொத்துகள் தற்காலிக அடிப்படையில் முடக்கப்பட்டுள்ளன என்று அரசாங்கம் தெரிவித்துள்ளது.**

திட்டமிட்ட குற்றச்செயல்களுடன் தொடர்புடைய பாதாள உலகக்குழு உறுப்பினர்கள் எனச் சந்தேகிக்கப்படுபவர்களின் சொத்துகளே அதிகளவில் முடக்கப்பட்டுள்ளன என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜயபால தெரிவித்துள்ளார்.

முடக்கப்பட்ட சொத்துகளில் சில அரசியல்வாதிகளின் சொத்துகளும் உள்ளடங்குகின்றன. இந்தக்குற்றச்செயல்கள் தொடர்பில் விசாரணை நடத்தப்பட்டுவருகின்றது. குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர்களது சொத்துக்களை பொறுப்பேற்று பராமரிப்பதற்காக விசேட அதிகாரசபையொன்றை உருவாக்குவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-25-இ)

## சட்டவிரோத வாகன இறக்குமதி: முன்னாள் தவிசாளர் கைது!

கொழும்பு, செப்.16

சட்டவிரோதமான முறையில் வாகனங்களை இறக்குமதி செய்து மோசடிசெய்த குற்றச்சாட்டில் வத்தேகம நகரசபையின் முன்னாள் தலைவர் ரவீந்திர பண்டார மற்றும் அவரது நண்பர் லக்ஷித மனோஜ் வீரபாகு ஆகியோர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். கைதானவர்களிடமிருந்து இரண்டு சொகுசு ஜீப்களும் கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர். குற்றப்புலனாய்வுப் பிரிவினருக்கு செய்யப்பட்ட முறைப்பாடுகளின் அடிப்படையில் மேலதிக விசாரணைகள் இடம்பெற்றுவருகின்றன என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (எ-25-இ)

## கட்டாய பஸ்தரச்சோதனைக்கு பஸ்சங்கங்கள் கடும் எதிர்ப்பு!

கொழும்பு, செப்.16

நீண்டதூர சேவையில் ஈடுபடும் பஸ்கள் அனைத்தும் பயணத்தை ஆரம்பிப்பதற்கு முன்னர் அடிப்படைத் தரப் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவதைக் கட்டாயமாக்கும் அரசாங்கத்தின் நடவடிக்கைக்கு பஸ்சங்கங்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளன.

முறையான ஆய்வுக்குப்பிறகே அரசாங்கம் இத்தகைய முடிவுகளை எடுக்கவேண்டும் என இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார். அரசாங்கம் உரிய வழிமுறைகள் இல்லாமல் திட்டத்தைச் செயற்படுத்தினால், எதிர்காலத்தில் பஸ்கள் சேவை நிறுத்தத்தில் ஈடுபடக்கூடும் என்றும் அவர் எச்சரித்துள்ளார். அதேவேளை, நீண்ட தூர சேவை பஸ்களுக்கு பொறியியல் அறிக்கையைப் பெறுவதை கட்டாயமாக்குவதில் கவனம் செலுத்தப்படுகின்றது என்று போக்குவரத்து அமைச்சு தெரிவித்துள்ளது. நீண்டதூர சேவை பஸ்களால் ஏற்படும் விபத்துகளைத் தடுப்பதற்கான ஒரு நடவடிக்கையாக இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. 100 கிலோமீற்றருக்கு மேல் பயணம் செய்யும் அனைத்து பஸ்களும் இந்த அறிக்கையைப் பெறவேண்டும் என்றும் அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (எ-25-இ)



## துறைமுகத்திலுள்ள 1,000 வாகனங்களை விடுவிக்கத் திட்டம்

இறக்குமதி செய்யப்பட்டு, துறைமுகத்தில் தேங்கியுள்ள சுமார் ஆயிரம் வாகனங்களை வெளியேற்றுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நிதி அமைச்சு, இறக்குமதி மற்றும் ஏற்றுமதித்திணைக்களம், சுங்கத்திணைக்களம் மற்றும் சட்டமா அதிபர் பிரதிநிதிகள் இணைந்து, இதுதொடர்பில் நீதிமன்றத்தில் முன்மொழிவுகளைச் சமர்ப்பிக்கவுள்ளனர்.

அதேவேளை இந்த வருடத்தில் வாகன இறக்குமதி தளர்த்தப்பட்டதிலிருந்து, சுமார் 2 இலட்சத்து 13 ஆயிரத்து 500 வாகனங்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன. இதில் உந்துருளிகளும் அடங்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-க-இ)

## 10 ஆண்டுகளுக்குப்போதுமான போதைப்பொருள் நாட்டுக்குள்

### பிரதி அமைச்சர் டி.பி.சரத் தெரிவிப்பு

கொழும்பு, செப்.16

நாட்டுக்குள்போதைப்பொருள் கொண்டுவரப்படும் அனைத்து வழிகளும் நிறுத்தப்பட்டாலும் இன்னமும் சுமார் 10 ஆண்டுகளுக்குத் தேவையான போதைப்பொருள் நாட்டுக்குள் பரவியுள்ளது என்று பிரதி அமைச்சர் டி.பி.சரத் தெரிவித்துள்ளார். பெருந்தொகைப் போதைப்பொருள்கள் நாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளன. பெருமளவு போதைபொருள்கள் மண்ணுக்குள் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளன. இது நாட்டுக்குப் பெரும் அழிவை ஏற்படுத்தும். இதனால் போதைப்பொருள் ஒழிப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (எ-25-இ)

## 100 தாழ்தள பஸ்கள் விரைவில் கொள்வனவு

கொழும்பு, செப்.16

நகர்ப்புறங்களில் பயணிகள் போக்குவரத்தை மேம்படுத்தும் நோக்கில் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சு 100 தாழ்தள பஸ்களைக் கொள்வனவு செய்யவுள்ளது.

இந்த பஸ்கள் வசதியானவையாகவும், நவீனமாகவும், முக்கியமான நகரங்களில்பொதுப் போக்குவரத்துச் சேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையிலும் வடிவமைக்கப்படும்.

இந்தத் திட்டம் முதியவர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கு அணுகலை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டது என்றும், அதே நேரத்தில் பொதுப்போக்குவரத்தை அதிக அளவில் பயன்படுத்துவதை ஊக்குவிப்பதன் மூலம் போக்குவரத்து நெரிசலைக் குறைக்க எடுக்கும் முயற்சி என்றும் அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (எ-25-இ)

## நாங்கள் இருக்கிறது இலங்கையோ?

கோடையில குடிக்கத்தண்ணியில்லை எண்டால் மாரியிலதான் கிணறுவெட்ட வாற வீரவான்கள்தான் அரசாங்க உத்தியோகத்தர்மார் எண்டு எங்கட சனத்திட்ட ஒரு எண்ணம் கனகாலமே இருக்குது. சில இடங்களில அப்பிடி அரசாங்க உத்தியோகத்தர்மார் நேரகாலத்துக்கு வேலையளை முடிக்காமல் இழுத்தடிக்கிறதாலையும், சனத்தைப் போட்டு அலைக்கழிக்கிறதாலையும் எல்லா இடமும் அப்பிடித்தான் அரசாங்க உத்தியோகத்தர்மார் இருப்பினம் எண்டு எல்லாருக்கும் பதிஞ்சு போட்டுது. ஆனால் எல்லா இடங்களிலையும் விதிவிலக்குகளும் இருக்கத்தானே செய்யும். அப்பிடி ஒரு விதிவிலக்கான சம்பவம் நடந்ததைக் கண்டு, யாழ்ப்பாணம் திருநெல்வேலியில சனம் திகைச்சுப்போய் நிக்குது.

திருநெல்வேலி மாரியம்மன் கோயில் வீதி முடக்கில, றோட்டுக்கரையோரமா கொஞ்சக்காலத்துக்கு முதல் தண்ணிப்பைப் தாட்டவை. அதுக்குப்பிறகு அந்த றோட்டைக் காப்பெற் றோட்டா மாத்திட்டினம். அப்பிடி காப்பெற் போடேக்குள்ள றோட்டு முந்தி இருந்ததை விட உயரமா மாற, கரையில தண்ணிப்பைப் தாட்ட இடம் பள்ளமாப் போட்டுது. றோட்டு முடக்கிலையும் இப்பிடி பள்ளமா இருந்ததால அதால ஆக்கள் போய்வாறது கஷ்டமாப் போட்டுது. அதோட இப்ப மழையும் பெய்து அந்தத் தண்ணிப்பைப் தாட்ட கிடங்குக்க நிக்க, 'எதால போறது?' எண்டு எல்லாரும் ஆளுக்காள் பார்த்துப்போட்டு, அங்கால இஞ்சால சுத்தி வேற பாதையளாலதான் போய்வந்துகொண்டிருந்தவை. இனி மாரிகாலம் துடங்கினால் எது பள்ளம், எது பாதை எண்டு கண்டுபிடிக்கமுடியாதளவுக்கு வெள்ளம் போட்டிடும் எண்டதால், இதுக்கு ஒரு முடிவு கட்டுவம் எண்டு அந்த றோட்டில இருக்கிறவை பழைய பூங்காவடியில இருக்கிற நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையிட்ட போன வெள்ளிக்கிழமை பின்னேரம் போய் ஒரு முறைப்பாட்டைக் குடுத்திட்டு வந்திட்டினம்.

'எப்பிடியும் மாரி தொடங்கமுதல், இன்னும் ஒரு மாதத்துக்குள்ள எங்கட முறைப்பாட்டுக்குத் தீர்வு கிடைச்சிடும்' எண்டுதான் அவையள் நினைச்சுக்கொண்டு, அங்கையிருந்து திரும்பி வந்தவை. ஆனால் அடுத்தநாள் விடியவே அவைக்குப் பெரும் அதிர்ச்சி. முதல்நாள் பின்னேரம் குடுத்த முறைப்பாட்டுக்கு விடிய வெள்ளனவே தீர்வு. நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபைக்காரர் விடியவே மாரியம்மன் வீதிக்கு வந்து வேலையைத் துடங்கிட்டினம். மத்தியானம் 12 மணிக்கு முதலே பைப்லைன் தாட்ட பள்ளத்தை நிரவிப்போட்டுப் போட்டினம். இப்பிடி முறைப்பாடு குடுத்த 24 மணித்தியாலத்துக்கு முதலே மின்னல்வேகத்தில நடவடிக்கை எடுத்ததுக்கு அந்தச் சபையைப் பாராட்டத்தான் வேணும். 'நாங்கள் இருக்கிறது, இலங்கையோ அமெரிக்காவோ எண்டு நம்பேலாமல் கிடக்கு. அப்பிடி உடன வந்து பள்ளத்தை நிரவிப்போட்டினம். இப்பிடி எல்லாத் திணைக்களங்களும் சனங்களின்ர பிரச்சினையளுக்குக் காது குடுத்து, அதை உடன உடன தீர்த்துவைச்சால் இலங்கை எங்கேயோ போடும்' எண்டு அந்த றோட்டில இருக்கிறவை புகழுகினம் கண்டியளோ.

- பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** இன்று புதிய முயற்சிகள் அனுகூலமாகும். கணவன் மனைவிக்கிடையே ஏற்பட்டிருந்த கருத்து வேறுபாடுகள் நீங்கும் வாய்ப்பு ஏற்படும். பிள்ளைகள் வழியில் எதிர்பாராத செலவுகள் ஏற்பட்டாலும் மகிழ்ச்சியான செலவாகவே இருக்கும்.

**இடபம்:** உற்சாகமான நாள். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். வாழ்க்கைத் துணையின் தேவைகளைப் பூர்த்தி செய்து மகிழ்ச்சி அடைவீர்கள். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். அரசாங்கக் காரியங்கள் அனுகூலமாகமுடியும்.

**மிதுனம்:** இன்று தொடங்கும் புதிய முயற்சி சாதகமாக முடியும். சிலருக்கு சகோதர வகையில் எதிர்பாராத ஆதாயம் கிடைக்கும். மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். வாழ்க்கைத் துணைவழி உறவினர்கள் வகையில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும்.

**கடகம்:** உற்சாகமான நாள். எதிர்பாராத பணவரவு உங்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தும். சிலருக்குக் குடும்பத்துடன் குலதெய்வக் கோயிலுக்குச் சென்று பிரார்த்தனையை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படும்.

**சிம்மம்:** கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். முக்கியமான விஷயம் தொடர்பாக வாழ்க்கைத்துணையிடம் ஆலோசனை கேட்பீர்கள். சிலருக்குத் தாய்மாமன் வகையில் சுபச்செலவுகள் ஏற்படக்கூடும்.

**கன்னி:** வாழ்க்கைத்துணை உங்கள் தேவையறிந்து பண உதவி செய்வார். சிலருக்கு உறவினர் வீட்டு விருந்து விசேஷங்களில் கலந்து கொள்ளும் வாய்ப்பு ஏற்படும். அலுவலகத்தில் உற்சாகமாகப் பணிகளில் ஈடுபடுவீர்கள்.

**துலாம்:** இன்று புதிய முயற்சியைத் தவிர்க்கவும். தந்தைவழியில் எதிர்பார்த்த உதவி கிடைப்பதில் தடை, தாமதம் ஏற்படக்கூடும். சகோதரர்கள் உதவி கேட்டு நச்சரிப்பார்கள். கொடுத்த கடனில் ஒரு பகுதி திரும்பக் கிடைக்கும்.

**விருச்சிகம்:** தேவையான பணம் கையில் இருப்பதால், செலவுகளை சமாளித்துவிடுவீர்கள். புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். சிலருக்கு வெளியூரில் இருக்கும் கோயில்களுக்குச் சென்று வழிபடும் வாய்ப்பு ஏற்படக்கூடும்.

**தனுசு:** இன்று எதிலும் பொறுமையாக இருப்பது நல்லது. திடீர் செலவுகளால் கடன் வாங்க நேரிடும். பிள்ளைகள் பிடிவாதம் பிடித்தாலும், அவர்களை விட்டுப்பிடிப்பது நல்லது.

**மகரம்:** கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். வாழ்க்கைத் துணையின் எதிர்பார்ப்புகளைப் பூர்த்தி செய்வீர்கள். பிற்பகலுக்கு மேல் எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு.

**கும்பம்:** எதிர்பாராத பணவரவு உண்டாகும். உடல் ஆரோக்கியம் மேம்படும். புதிய முயற்சி சாதகமாகமுடியும். உறவினர் வகையில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சகோதர வகையில் சுபச்செலவுகள் ஏற்படக்கூடும்.

**மீனம்:** தெய்வ அனுகூலம் நிறைந்த நாளாக இருக்கும். குலதெய்வப் பிரார்த்தனையை நிறைவேற்றும்வாய்ப்பும்சிலருக்குஏற்படக்கூடும். பயணத்தின்போது கொண்டுசெல்லும் பொருள்களை கவனமாகப் பார்த்துக்கொள்ளவும்.

# அனுமதியற்ற கட்டடத்துக்கு விதிக்கப்பட்ட தண்டம் ரத்து

*நகர அபிவிருத்தி அதிகாரசபையிடம் விளக்கம் கேட்க வவு. மாநகரசபை தீர்மானம்*

**வவுனியா, செப்.16**

**வவுனியா வெளிக்குளத்தில் அமைக்கப்பட்ட அனுமதியற்ற கட்டடமொன்றுக்கு விதிக்கப்பட்ட 49 இலட்சம் ரூபா தண்டப்பணத்தை செலுத்தத் தேவையில்லை என்று நகர அபிவிருத்தி அதிகாரசபை விலக்களிப்புச் செய்துள்ளது என்று வவுனியா மாநகரசபை அமர்வில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.**

மாநகரசபையின் மாதாந்த அமர்வில் முதல்வர் இது தொடர்பில் தெரிவித்துள்ளதாவது-

2019 ஆம் ஆண்டு அனுமதி இல்லாமல்அமைக்கப்பட்டகட்டம்தொடர்பாக 49 இலட்சம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டது. எனினும் அந்தத்தொகையைச் செலுத்ததேவையில்லை என்று நகர அபிவிருத்தி அதிகாரசபையால், அந்தக் காலப்பகுதியில் விலக்களிப்பு வழங்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் எனக்கு முறைப்பாடு கிடைத்துள்ளது. சபையில் தீர்மானம் எடுத்து, ஆராய்வதற்கான நடவடிக்கையை எடுக்க வேண்டும் என்றார். இதுதொடர்பாக தீர்மானம் தேவையில்லை. நகர அபிவிருத்தி அதிகாரசபையிடம் விளக்கம் கோரி சபை முதல்வரே அடுத்தகட்டச் செயற்பாடுகளை மேற்கொள்ளலாம் என்று உறுப்பினர்களான முகமட் முனவ்வர் மற்றும் சு.விஜயகுமார் ஆகியோர் தெரிவித்தனர். இதனால் சபை முதல்வருக்கும், இரு உறுப்பினர்களும் இடையில் நீண்ட வாதப்பிரதிவாதங்கள் இடம்பெற்றன. இறுதியில் சபைத் தீர்மானமாக இல்லாமல், எந்த அடிப்படையில் விலக்களிப்பு வழங்கப்பட்டது என்பது தொடர்பாக, நகர அபிவிருத்தி அதிகாரசபையிடம் விளக்கம் கோருவதற்கு, முதல்வருக்கு சபை உறுப்பினர்களால் அங்கீகாரம் வழங்கப்பட்டது. (எ-க-110)

# பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், செப்.16

மிருசுவில் உசன் இராமநாதன் மகாவித்தியாலய பரிசளிப்பு நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு வித்தியாலயத்தின் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் 2019ஆம் ஆண்டு தொடக்கம் 2024ஆம் ஆண்டு வரை வித்தியாலயத்தில் கல்வி கற்று பாடரீதியாக மூன்று தவணைகளிலும் 75 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களுக்கான பரிசில்கள், 2023, 2024 உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளை அடிப்படையாகக்கொண்டு பல்கலைக்கழகத்துக்குத் தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களுக்கான மதிப்பளிப்பு, தேசியமட்ட சாதனையாளருக்கான மதிப்பளிப்பு, 2024ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான மதிப்பளிப்பு என்பவற்றுடன், 2023ஆம் ஆண்டு தரம் 5இல் வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்ற மாணவர்களுக்கான புலமைப் பரிசில் கொடுப்பனவும் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-41-9)

# மனித உயிர்களைப்பாதுகாக்க மருத்துவமனையை தரமுயர்த்துக

*முஹமட் ஆலம் விளக்கம்*

மன்னார், செப்.16

மீண்டும் உயிர்களைக் காவுகொள்ளாமல், மன்னார் மாவட்டப் பொது மருத்துவமனையை சகல வளங்களுடனும் தரமுயர்த்த வேண்டும் என்று மன்னார் மாவட்ட மீனவர் கூட்டுறவுச் சங்கங்களின் செயலாளர் முஹமட் ஆலம்கோரிக்கைவிடுத்துள்ளார்.

மன்னார் மாவட்ட மருத்துவமனையை மத்திய அரசாங்கம் பொறுப்பேற்கவேண்டும் என்று சில கோரிக்கைகள் வெளியாகி சர்ச்சைகளைத் தோற்றுவித்துள்ள நிலையில் அது தொடர்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

மன்னார் மாவட்ட மருத்துவமனை பல உயிர்களைக் காவுகொண்டதைக் கடந்த காலங்களில் நாங்கள் பார்த்திருக்கின்றோம். மருத்துவமனையை மத்திய அரசாங்கம் பொறுப்பெடுத்து அனைத்து வசதிகளுடனும் தரமுயர்த்த வேண்டும் என்று வடக்கு மாகாண ஆளுநருக்குக் கடிதத்தை எழுதி இருந்தேன்.

சிறிய தேவைக்கும் வவுனியா அல்லது யாழ்ப்பாணம் மருத்துவமனைகளுக்கு மக்கள் செல்லக்கூடாது என்ற ஒரு நல்ல எண்ணத்தின் அடிப்படையில் இந்தக் கோரிக்கையை முன்வைத்து கடிதத்தை எழுதியிருந்தேன். மாகாணமா, மாவட்டமா என்ற விவாதத்துக்கு அப்பால், மனித உயிர்களே மிக முக்கியமானவை. அதை அனைத்துத் தரப்பினரும் ஏற்றுக்கொள்ளவேண்டும் - என்றார். (எ-க-213)

# மேசைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி கிண்ணம் சுவீகரித்தது மகாஜன!



யாழ்ப்பாணம், செப்.16

ஐ.சி.பி.ரி. பல்கலைக்கழக யாழ். வளாகத்தால் நடத்தப்பட்ட பாடசாலைகளுக்கு இடையிலான மேசைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் மகாஜனக் கல்லூரியின் 20 வயதுக்குட்பட்ட பெண்கள் அணி முதல் இடத்தை பெற்று வெற்றிக்கேடயத்தை கைப்பற்றிக்கொண்டது. இந்தப் போட்டி யாழ். இந்துக் கல்லூரியில் அண்மையில் நடைபெற்றது. போட்டியில் 6 பாடசாலைகள் பங்குபற்றியிருந்தன. (எ-25,9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உண்மை - நேர்மை - அஞ்சாமை



நாளொரு நல்வார்த்தை

நாவை அடக்கும் ஆற்றல் இன்மை பெரிய துரதிர்ஷ்டமாகும்.


–பேர்னார்ட்ஷா–

# நினைவேந்தல் அரசியல்

தமிழ் மக்களுக்காக நீராகாரம்கூட அருந்தாமல் பன்னிருநாள்கள், தன்னுடைய தேகத்தை ஆகுதியாக்கி யாகம் செய்த தியாகதீபம் திலீபனின் நினைவேந்தல் நேற்றுமுதல் உணர்வெழுச்சியுடன் ஆரம்பமாகிவிட்டது. எமது உரிமைப்போராட்டத்தின் காவல் தெய்வங்களாக இருந்த விடுதலைப்புலிகளின் ஆயுதங்கள் முள்ளிவாய்க்காலில் மௌனிக்கப்பட்ட பின்னர், எமது இனத்தின் வலியையும், உரிமையையும் வெளிப்படுத்தும் ஒரேயொரு பற்றுக்கோடாக எஞ்சியிருப்பது நினைவேந்தல்கள் மட்டுமே. எமக்காக ஆகுதியான மறவர்களையும், மக்களையும் நெஞ்சிலிருத்தி அவர்களின் தியாக நெருப்பை, அதே வெம்மையோடு அடுத்த சந்ததியிடம் கையளிக்கும் கருவிகள் இந்த நினைவேந்தல்களே. தீபங்களை அணைக்கமுடியும், ஆனால் தீயை எவராலும் அழிக்கமுடியாது. அதேபோன்று எமது இனத்தின் உரிமைப்போரை அழித்துவிட்டாலும், எங்கள் உள்ளங்களில் கனன்றுகொண்டிருக்கும் உரிமைத்தீயை எவராலும் அழிக்கவோ, அணைக்கவோ முடியாது. அத்தோடு எம் சந்ததியோடு இந்த உரிமைத்தீயின் தொடர்ச்சியை முடிவுக்குக் கொண்டுவருதலும் ஆகாது. எப்படி யூதர்கள் தங்கள் தேசத்தை நினைவுகள் வழியே ஆயிரக்கணக்கான ஆண்டுகளாகச் சுமந்தார்களோ, அதேபோன்று நாமும் நினைவேந்தல்கள் வழியே அந்தத் தீயை அடுத்த சந்ததியினரிடம் ஊடுகடத்தி, அதை அணையாமல் பேணவேண்டும்.

ஆனால், இங்கேநடப்பவையோ அதற்கு எதிரானவையாவே இருக்கின்றன. மாவீரர்களினதும், மக்களினதும் தியாகத்தீயில் அரசியல் குளிர்காயவே பலரும் நினைக்கின்றனர். நினைவேந்தல்களைத் தங்கள் குடும்பச் சொத்துப்போல் நினைத்து, தாம் மட்டுமே நினைவேந்தல்களைச் செய்யமுடியும், மற்றவர்களுக்கு உரிமையில்லை என்று சொல்கிறார்கள், செய்கிறார்கள். அதிலும் குறிப்பாக நல்லூரில் அமைந்துள்ள தியாகதீபம் திலீபனின் நினைவுத்தூபியில் நடக்கும் அஞ்சலிப்புகளிலும், அதற்கு நேரெதிரே உள்ள நிலப்பரப்பில் நடத்தப்பட்ட ஆவணக்காட்சியகக் கண்காட்சியிலும் உள்ளக சுயநல அரசியல் குறுக்கீடுகள், நினைவேந்தல்களின் புனிதத்தைக் கெடுப்பனவாக உள்ளன. கடந்த சில வருடங்களாக இந்த முரண்நிலை நீடிக்கவே செய்கின்றது.அந்தச்சாபக்கேடு இந்தவருடமும் தொடர்வதுதான் பெரும் வேதனை.

குறிப்பாக தமிழ்த்தேசிய முன்னணியினர் இந்த விடயத்தில் செய்யும் தில்லுமுல்லுகளும், சுயலாபக் காய்நகர்த்தல்களும் மிக மோசமானவையாக உள்ளன. கடந்தகாலங்களில் தமிழ்த் தேசிய முன்னணிதான் நினைவேந்தல்களை இராணுவ அடக்குமுறைகளுக்கு மத்தியில் துணிச்சலாக முன்னெடுத்திருந்தது. இன்றைக்கு நினைவேந்தல்கள் இடையறாது அனுஷ்டிக்கப்படுவதற்கு தமிழ்த் தேசிய முன்னணியின் துணிச்சலான நடவடிக்கைகளே காரணம். அதில் எள்ளளவும் சந்தேகமில்லை.ஆனால் அப்படிக் கடந்தகாலங்களில் நாமே நினைவேந்தல்களை இத்தனை நெருக்கடிகளுக்குள்ளும் பேணினோம் என்ற ஒற்றை அடையாளத்தை வைத்துக்கொண்டு, 'இனிவரும் காலங்களில் நினைவேந்தல் தொடர்பான எல்லாவிடயங்களையும் நாம்தான் செய்யவேண்டும், எமக்குத்தான் அந்த உரிமை இருக்கின்றது' என நினைவேந்தல்களுக்கு காப்புரிமை பெற்றவர்கள் போல அந்தக் கட்சியினர் நடந்துகொள்வது மாவீரர்களினதும், மக்களினதும் தியாகத்தைக் கொச்சைப்படுத்துவதாகவே அமைகின்றது.எனவே இனியாவது அரசியல் இலாபங்களையும், முரண்களையும் தூக்கியெறிந்துவிட்டு, நினைவேந்தல்களை எல்லோரும் ஒன்றித்து, உணர்வோடு கடைப்பிடிக்க அனைவரும் முனைய வேண்டும்.




## பேர்ள் கப்பல் தரவுத்தளம் அழிப்பு சர்வதேச உதவி பெறத்தீர்மானம்

கொழும்பு,செப்.16

**எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலின் மின்னஞ்சல் தரவுத்தளத்தை அழித்து, கொழும்புத் துறைமுகத்தின் துறைமுக மாஸ்டரைத் தவறாக வழிநடத்த முயன்றவர்களை அடையாளம் காணும் நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.**

இந்த விடயத்தில் தடயவியல் கணக்காய்வை நடத்த, தகுதிவாய்ந்த சர்வதேச நிறுவனத்தின் சேவைகளைப் பெறுவது தொடர்பில், நீதி அமைச்சால், அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்படவுள்ளது. உள்ளூர்த் தொழில்நுட்ப நிபுணத்துவம், விரிவான கணக்காய்வை நடத்தப் போதுமானதாக இல்லை என்பதைக் கருத்திற்கொண்டு, தடயவியல் கணக்காய்வை நடத்த சர்வதேச உதவியை சட்டமா அதிபர் பாரிந்த ரணசிங்க கோரியுள்ளதை அடுத்தே இந்த அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்படவுள்ளது. (எ-க-இ)



## சிகிரியா சுவரை சேதப்படுத்திய யுவதி கைது

கொழும்பு, செப்.16

உலகப் பாரம்பரியத் தளமான சிகிரியாக் கண்ணாடிச் சுவரை சேதப்படுத்தும் வகையில் கிறுக்கினார் என்று குற்றஞ்சாட்டப்பட்ட இளம்பெண் ஒருவர் நேற்றுமுன்தினம் சிகிரியாப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார். அவிசாவளையைச் சேர்ந்த 21 வயதுடைய இளம் பெண்ணொருவர் மேலும் சிலருடன் சிகிரியாவுக்குச் சென்றிருந்தபோது சிகிரியாக் கண்ணாடிச் சுவரைச் சேதப்படுத்தும் வகையில் செயற்பட்டார் என்று தெரிவிக்கப்படுகின்றது. அதேவேளை, சிகிரியாக் கண்ணாடிச் சுவற்றில் கிறுக்கிய குற்றச்சாட்டில் பெண்ணொருவர் ஏற்கனவே கைதுசெய்யப்பட்டிருந்த நிலையில் அவருக்குச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டிருந்தது. (எ-இ)

## பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் இறுதி வரைவு இந்த வாரம்

கொழும்பு,செப்.16

புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட வரைவை, வரைவு செய்வது தொடர்பில் நியமிக்கப்பட்ட நிபுணர்குழுவின் இறுதி வரைவு, இந்த வாரத்துக்குள் நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சரிடம், கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று அந்தக் குழுவின் தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி ரியென்சி அர்சகுலரத்ன தெரிவித்துள்ளார். (எ-க-இ)

## குஷ் போதைப்பொளுடன் சுற்றுலாவி ஒருவர் கைது!

கொழும்பு, செப்.16

கட்டுநாயக்க விமானநிலையத்தில் "குஷ்" போதைப் பொருளுடன் வெளிநாட்டுப் பயணியொருவர் கடந்த சனிக்கிழமை கைதுசெய்யப்பட்டுள்ளார். சந்தேகநபரிடம் இருந்து சுமார் 85.42 மில்லியன் ரூபா மதிப்புடைய 8 கிலோ 542 கிராம் எடையுள்ள "குஷ்" போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது. போக்குவரத்து முனையத்தில் காத்திருந்தபோது, அதிகாரப்பூர்வ பொலிஸ் நாயின் உதவியுடன் விமானநிலையப் பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவின் அதிகாரிகள் குழுவால் கைது செய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்ட நபர் இந்தியா சென்னையைச் சேர்ந்த 33 வயதுடைய புகைப்படக் கலைஞர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. 1603 "ராண்டி" என்ற பொலிஸ் நாயே போதைப்பொருளைக் கண்டுபிடித்துள்ளது. (எ-25-இ)

## குருக்கள்மடம் மனிதப்புதைகுழி அகழ்வுப்பணிகள் அடுத்த வாரம்

மட்டக்களப்பு, செப்.16

மட்டக்களப்பு குருக்கள்மடம் மனிதப் புதைகுழியின் அகழ்வுப் பணிகள் அடுத்த வாரம் ஆரம்பிக்கப்படவுள்ளன. இதற்காக 29 இலட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது என்று நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு பிரதியமைச்சர் முனீர் முளப்பர் தெரிவித்துள்ளார்.

களுவாஞ்சிக்குடி நீதிவானின் உத்தரவுக்கமைய அகழ்வுப் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. அதே வேளை அகழ்வுப் பணிகளை முன்னெடுப்பது தொடர்பான விசாரணை மற்றும் நிதி ஒதுக்கீடு தொடர்பான அறிக்கை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்று காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான அலுவலகம் தெரிவித்திருந்தது. அதற்கமைவாக களுவாஞ்சிக்குடி நீதவானிடம் நாளைமறுதினம் இதுதொடர்பான விசாரணை அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படவுள்ளன என்றும் அலுவலகம் தெரிவித்துள்ளது. (எ-க-இ)

நாளை

புதன்கிழமை - புரட்டாதி 1

17.09.2025

சுபநேரம் : 04.33 - 06.03

ராகுகாலம் : 12.03 - 01.33



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



குடத்தனையில்

# திடீரெனப் பெய்த மழை; வெங்காயச் செய்கை அழிவு

யாழ்ப்பாணம்,செப்.16

**வடமராட்சி கிழக்கு குடத்தனையில் கடந்த தினங்களில் கொட்டித் தீர்த்த கனமழை காரணமாக, அறுவடை செய்யப்பட்டு, வயல்களில் உலரவிடப்பட்டிருந்த வெங்காயங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.**

வடமராட்சி மற்றும் வடமராட்சி கிழக்கின் பல பகுதிகளிலும் வெங்காயச்செய்கை மேற்கொள்ளப்பட்டது. தற்போது அந்தப் பகுதிகளில் அறுவடை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. குடத்தனைப் பகுதியில் அறுவடை செய்யப்பட்ட வெங்காயங்கள், வயல்களில் உலரவிடப்பட்டிருந்தன.

கடந்த சில தினங்களாக கொட்டித் தீர்த்த கனமழை கார்ணமாக, வயல்களில் வெள்ளம் தேங்கி நிற்பதால், வெங்காயங்களை உலரவிட முடியாது விவசாயிகள் பெரும் துன்பத்தை எதிர்நோக்கியுள்ளனர். இதேவேளை, கடந்த ஆறு வருடங்களுக்கு முன்னரும் இவ்வாறு அறுவடை நேரத்தில் கொட்டித்தீர்த்த கனமழை காரணமாக, அறுவடை செய்யப்பட்ட வெங்காயங்களை விவசாயிகள் படகின்மூலம் ஏற்றிச் சென்றனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-க-100)

# சொற்பொழிவு

யாழ்ப்பாணம், செப்.16

சைவவாழ்வியலில் திருவிளையாடற்புராணம் பெறும் முக்கியத்துவம் பற்றி விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக சிவநெறிப்பிரகாசர் சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கம் நடத்தும் வாராந்தத் திருவிளையாடற்புராணச் சிறப்புச் சொற்பொழிவுத்தொடர் எதிர்வரும் 19ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4மணிக்கு சிறுப்பிட்டி மேற்கு அருள்மிகு ஸ்ரீ நாகதம்பிரான் ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

பரஞ்சோதிமுனிவர் குருபூஜையை அடுத்து மாணவர்களின் கலைநிகழ்வும், சைவப்புலவர் பிரசங்க பூஷணம் செ.த.குமரனின் "மாபாதகத் தீர்த்த படலம்" எனும் தொனிப்பொருளில் சொற்பொழிவும் இடம்பெறவுள்ளன. சொற்பொழிவிலிருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப்பரிசில்கள் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-41)

++++

யாழ்ப்பாணம், செப்.16

நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி கோவில் நடத்தும் வாராந்தச் சுக்கிரவாரக் கந்தபுராணப் படனத்தொடர் சொற்பொழிவு எதிர்வரும் 19ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5.30மணிக்கு கோவில் சண்முக விலாச மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

சிவநெறிப்பிரகாசர், சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நடைபெறவுள்ள நிகழ்வில் கோவிலின் பிரதம குருக்கள் ஸ்கந்தகுரு ஞானபானு, சிவஸ்ரீ இராஜேந்திர சுவாமிநாதக்குருக்களின் ஆசியுரையும், பரிபாலனசபைத் தலைவர் சி. தயாநாதனின் தலைமையுரையும், இளஞ்சைவப்புலவர் பிரசங்கச்சுடர் த. மனோஜ்குமாரின் "நகர்செய் படலம்" எனும் விடயப்பொருளில் சிறப்புச்சொற்பொழிவும் இடம்பெறவுள்ளன. சொற்பொழிவிலிருந்து நீர்வைக்கந்தன் புராண இதிகாசப் பாடசாலை மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப்பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. (எ-41)

## 'கரங்கள் சஞ்சிகை' ஆக்கங்கள் கோரல்

கொடிகாமம், செப். 16

சாவகச்சேரி பிரதேசசபையின் கைதடி பொது நூலக வாசகர் வட்டத்தால் தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு வெளியிடப்படவுள்ள "கரங்கள் சஞ்சிகை" இதமுக்காக கைதடிப் பிரதேசத்தைச் சேர்ந்த வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன.

கதை, கவிதை, கட்டுரை, அறிவியல் துணுக்குகள், பழமொழிகள், சித்திரங்கள் போன்ற ஆக்கங்களை எதிர்வரும் 30ஆம் திகதிக்கு முன்னர் கைதடி பொதுநூலக விலாசத்துக்கு அனுப்ப முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

விசேட செயற்பாடுகளாக மொழிவிருத்திச் செயற்பாடுகள், வாசிப்பு வலுவூட்டல்கள், நிறம் தீட்டல், வாசிப்பு முகாம் போன்றவற்றில் சிறுவர்கள் சனி, ஞாயிறு பொது விடுமுறை நாள்களில் காலை 9 மணி தொடக்கம் பகல் 12.30 வரையும் பி.ப. 2.30 மணி தொடக்கம் மாலை 4.30 மணிவரையும் பங்குபற்றி பயன்பெறமுடியும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-25.159)





## தேசியமட்ட பளுதூக்கல் போட்டி மகாஜன மாணவர்கள் சாதனை





யாழ்ப்பாணம், செப்.16

அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையிலான பளுதூக்கல் போட்டியில் மகாஜன கல்லூரி மாணவர்கள் இரு வெள்ளி பதக்கங்களையும், இரு வெண்கலபதக்கங்களையும் பெற்றுச் சாதனை படைத்துள்ளனர்.

17 வயது ஆண்கள் 55 கிலோ எடைப் பிரிவில் வி.சாதுரியன் 129 கிலோ பளு தூக்கி வெண்கலப் பதக்கமும், 17 வயது பெண்கள் 81கிலோ பிரிவில் ச.ஷானுஜா 75 கிலோ பளு தூக்கி வெண்கலபதக்கமும் பெற்றனர்.

20 வயது ஆண்கள் 109 கிலோ எடைப் பிரிவில் ஜெ.ஜெனுசின் 195 கிலோ பளுதூக்கி வெள்ளிப் பதக்கமும், 20 வயது பெண்கள் 71 கிலோ எடைப் பிரிவில் ர. ஸ்ரீவித்தகி 107 கிலோ பளுதூக்கி வெள்ளிப் பதக்கமும் பெற்றுள்ளனர். இந்தப் போட்டிகள் பொலன்னறுவ ரோயல் கல்லூரி விளையாட்டு அரங்கில் அண்மையில் நடைபெற்றிருந்தன. (எ-25)

## 'மக்கள் பங்கேற்பு எனும் மாயமான்' யாழ்.பல்கலையில் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், செப்.16

யாழ்.பல்கலைக்கழக நுண்கலைத் துறையின் ஏற்பாட்டில், "மக்கள் பங்கேற்பு எனும் மாயமான் திட்டமிடுதல், அபிவிருத்தி, மரபுரிமைப் பாதுகாப்பு" எனும் தொனிப்பொருளிலான கருத்தரங்கு யாழ்.பல்கலைக்கழக கலைப்பீடக் கருத்தரங்கு மண்டபத்தில் நாளை புதன்கிழமை மாலை 3.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. உப்சாலா ஸ்வீடிஷ் வேளாண் அறிவியல் பல்கலைக்கழகத்தின், சுற்றுச்சூழல் தொடர்புப் பேராசிரியர் கலாநிதி நடராஜா ஸ்ரீஸ்கந்தராஜா அதில் கலந்துகொண்டு கருத்துரை யாற்றவுள்ளார். (எ-25)

# மீனவர் வாடிகள் மீது தாக்குதல்; கைதான நால்வருக்கும் மறியல்

மீனவர் வாடிகள்மீது தாக்குதல் நடத்தி, கடற்றொழில் உபகரணங்களுக்குத் தீ வைத்து எரித்தழித்த, குற்றச்சாட்டில் கைதான சந்தேகநபர்கள் நால்வரும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

கற்கோவளத்தில் இடம்பெற்றுவரும் சட்டவிரோத மணல் கடத்தலை நிறுத்தவேண்டும் என்று, கடற்றொழில் சங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தை, சம்பந்தப்பட்டவர்களிடம் நேரில் தெரிவித்துத் திரும்பியபோது, மணல் கடத்தலில் ஈடுபட்டுவரும் தரப்பினரால், கடந்த வெள்ளிக்கிழமை மீனவர் வாடிகளில் இருந்த உபகரணங்கள் தீவைத்து எரிக்கப்பட்டிருந்தன. இதன்போது அங்கிருந்த இரண்டு மீனவர்களும் படுகாயமடைந்தனர்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்களைக் கைதுசெய்யவேண்டும் என்று அந்தப்பகுதி மீனவர்கள் போராட்டம் நடத்தினர். தொடர்ந்து தொழில் மறிப்புப் போராட்டத்திலும் ஈடுபட்டுவருகின்றனர். இந்தத் தாக்குதல் சம்பவத்தில் 8 நபர்கள் ஈடுபட்டமை அடையாளம் காணப்பட்டுள்ளது. அவர்களில் நால்வர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு, பருத்தித்துறை நீதிவான் முன்பாக நேற்று முன்தினம் முற்படுத்தப்பட்டனர். நான்கு பேரையும் எதிர்வரும் 19ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (எ-க-100)

## மயிலணி சைவ வித்தியாலய வருடாந்தப் பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், செப்.16

சுன்னாகம் மயிலணி சைவ மகாவித்தியாலயத்தின் வருடாந்தப் பரிசளிப்பு விழா பாடசாலை பிரதான மண்டபத்தில் நாளை புதன்கிழமை பி.ப. 1 மணிக்கு நடைபெறவுள்ளது.

பாடசாலை முதல்வர் பா.பார்த்தீபன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி ஜமுனா இராஜசீலனும், சிறப்பு விருந்தினர்களாக மல்லாகம் மகாவித்தியாலய ஆசிரியர் திருமதி மோகனசுந்தரி ஜெயக்குமார், இணுவில் மத்திய கல்லூரி ஆசிரியர் சு.கஜேந்திரன், குப்பிளான் விக்னேஸ்வரா மகாவித்தியாலய ஆசிரியர் திருமதி சிவதர்சி கங்காதரன் ஆகியோரும், கௌரவ விருந்தினராக சுன்னாகம் தேசிய அபிவிருத்தி லொத்தர் சபை முகவர் நடராஜா வசீகரும் கலந்துகொள்ளவுள்ளனர். நினைவுரையை உடுப்பிட்டி மகளிர் கல்லூரி ஆசிரியர் திருமதி உலகேஸ்வரி சேதுபதி ஆற்றவுள்ளார். (எ-25)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலபோக கூட்டமும் உரமானியப் பதிவும்

எழுதுமட்டுவாழ் கமக்கார அமைப்புக்கு உட்பட்ட நெற்செய்கையாளர்களுக்கான காலபோக கூட்டமும் உரமானியப் பதிவும் கமநல சேவைகள் அலுவலர் தலைமையில் எழுதுமட்டுவாழ் பொதுச்சந்தை மண்டபத்தில் நாளை புதன்கிழமை மு.ப. 9 மணிக்கு நடைபெறவுள்ளது. அமைப்பின் அங்கத்தவர்கள் தமது தேசிய அடையாள அட்டை, 2025ஆம் ஆண்டுக்கான ஏக்கர் வரி மற்றும் சந்தா ஆகியவை செலுத்தியதற்கான பற்றுச்சீட்டினையும் கொண்டு வருமாறு அமைப்பின் செயலாளர் இ.தெய்வேந்திரம் பிள்ளை அறிவித்துள்ளார். (ம.25.9)

**விதை நெல் விற்பனைக்கு**
இயந்திரம் மூலம் சுத்திகரிக்கப்பட்ட அதிகூடிய விளைச்சலைக் கொண்ட 3 1/2 மாத BG 34.6 விதை நெல் விற்பனைக்கு உண்டு.
**077 659 2044**
(CR/45066) J-1

# செப்ரெம்பர் மாதக் கொடுப்பனவு வங்கியில் வைப்பு

பளை, செப்.16

பச்சிலைப்பள்ளிப் பிரதேச நலன்புரி நன்மைகள் சபையால் முதலாம் கட்டத்தில் கொடுப்பனவுக்காக தேர்வுசெய்யப்பட்ட பயனாளிகளின் செப்ரெம்பர் மாத நலன்புரி நன்மைகள் கொடுப்பனவு சொந்த வங்கிக் கணக்கில் வைப்புச்செய்யப்பட்டுள்ளது.

பயனாளிகளில் இறப்புகள் மற்றும் இடர்பாடுகள் இருக்குமாயின் எழுத்துமூலம் அறியத்தரவேண்டும் என்று அனைத்துக் கிராம அலுவலர்களுக்கும் பிரதேச நலன்புரி நன்மைகள் பிரிவினர் அறிவித்துள்ளனர். (எ-41-9)

**வேலையாட்கள் தேவை**
எனது தாயர் 83 வயது உதவி இன்றி ஏளாவாழி என்றல்ல அவருக்கு சமையல் வேலை செய்ய ஆள் தேவை
தொடர்பு: **077 938 8241**
(CS 49666) E

# UNIVERSITY OF JAFFNA
# INVITATION FOR BID

1. **The Chairman, Procurement Committee of University of Jaffna** now invites sealed bids from eligible and qualified bidders for the following works:


| No | Bid ID | Description of Work | Estimated Cost (Rs. In million) without VAT | Contract Period (No of Calendar Days) | Required CIDA Grade | Required Bid Security Amount and period | Non-refundable fee |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | YA/CWP/RE /C1/2025/17 | Refurbishment of Electrical Room & Generator Room of the Faculty of Science, University of Jaffna | 19.9 | 90 | C7 or above | Rs. 200,000.00 14.01.2026 | Rs. 5,000.00 |
| 2 | YA/CWP/RE /C1/2025/18 | Supply and Installation of Air Conditioners for Library at Faculty of Management Studies and Commerce, University of Jaffna | 5.41 | 60 | C8 or above | Rs. 60,000.00 14.01.2026 | Rs. 2,500.00 |
| 3 | YA/CWP/RE /C1/2025/19 | Internal Painting to the "A" Block at Faculty of Management Studies and Commerce, University of Jaffna | 3.97 | 60 | C9 or above | Rs. 40,000.00 14.01.2026 | Rs. 1,500.00 |
| 4 | YA/CWP/RE /C1/2025/20 | External Painting to the Faculty of Allied Health Science, University of Jaffna | 1.60 | 45 | C9 or above | Rs. 20,000.00 14.01.2026 | Rs. 1,500.00 |

2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure.
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall be registered in the field of Building Construction with the Institute for Construction Industry Development Authority (CIDA) as indicated in the above table.
4. Interested bidders may obtain further information from **Senior Assistant Registrar, Capital Works & Planning Branch, University of Jaffna, Thirunelvely, Jaffna** and view the bidding documents at the same address on any working day from **9:00hrs to 16:00hrs**. Contact numbers are: Phone: 021 2219201 Fax: 021 221 9201.
5. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on submission of a written application to the **Senior Assistant Registrar, Capital Works & Planning Branch, University of Jaffna, Thirunelvely, Jaffna** from **16th September 2025** until **30th September 2025** from **9:00 hrs to 16:00 hrs and** upon payment of a non-refundable fee detail given above table to be deposited to the Peoples Bank with the Reference No **"97000006000276"** should be filled in the Account Number column in the Deposit Slip or the payment can be made at the Shroff counter, University of Jaffna.
6. Sealed Bids shall be delivered or sent by registered post to the Senior Assistant Registrar, Capital Works & Planning Branch, University of Jaffna, P.O Box 57, Thirunelvely, Jaffna or be deposited in the tender box kept in the Capital Works & Planning Branch, to reach on or before 10.00 hrs on the 1st October, 2025. Bids will be opened soon after closing, at 10.00 hrs on the 1st October, 2025 at the same venue in the presence of the bidders' representatives who choose to attend.
7. Bids shall be valid at least for a period of **77 Days** from the date fixed for receiving of Bids or any extended date.
8. All Bids shall be accompanied by a Bid Security which shall be;
   - In the form included in the Section 09 in the Bidding document.
   - In favour of **"Vice Chancellor, University of Jaffna."**
   - For the amount indicated in the above table against each work.
   - Issued by one of the agencies indicated in the clause 16.0 of the Schedule.9
9. Pre bid meeting will be held at the **Board Room, University of Jaffna, Thirunelvely** at 10.00 hrs on the **24th September, 2025.**

**Chairman,**
**Department Procurement Committee,**
**University of Jaffna,**
**15.09.2025**

(CS 46065) E

# முதலாம் ஆண்டு நினைவுநாள்



தோற்றம் 16 • 03 • 1979

மறைவு 28 • 08 • 2024

## அமரர் இராசையா தர்மசேனன் (தர்மு)

திதி: தசமி (16.09.2025)

அப்பா நீங்கள் எமைப் பிரிந்து ஆண்டொன்று
கடந்து சென்றாலும் உங்கள் நினைவுகள் எங்கள்
இதயங்களில் என்றும் உயிர்ப்பாய் நிலைத்திருக்கும்
காலங்கள் கரைந்தாலும்
ஆயிரம் உறவுகள் எங்கிருந்தாலும் எம்
கண்களில் ஒளிரும் உங்கள் அன்பின் வெளிச்சம்

என்றும் உங்கள் நினைவுகளில்
அன்பு மனைவி, மகன்மார்
அப்பா சி.செ. இராசையா
குடும்பத்தினர்

கைதடி வடக்கு,
கைதடி

(CS/59413) J-1

## சிறுவர் இல்லத்திற்குச் சொந்தமான வாகனங்கள், இயந்திரங்கள் ஏல விற்பனை

எமது மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லத்திற்குச் சொந்தமான பின்வரும் விபரங்களினை உடைய வாகனங்கள், இயந்திரங்கள் கலப்பைகள் மற்றும் வருடாந்த பொருட் கணக்கெடுப்பின்போது விற்பனைக்கு சிபார்சு செய்யப்பட்ட பொருடகள் எதிர்வரும் 28.09.2025 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு சிறுவர் இல்லத்தின் பிரதான அலுவலக வளாகத்தில் ஏலத்தின் மூலம் விற்பனை செய்வதற்கு எமது முகாமைக்குழு தீர்மானித்துள்ளது. அதற்கேற்ப வாகனங்கள், இயந்திரங்கள் மற்றும் பொருட்களினை பெற விரும்புவோர் குறித்த திகதியில் குறித்த நேரத்திற்கு வருகை தந்து ஏலக் கேள்வியில் அதிகூடிய தொகையினைக் கோரி பெற்றுக் கொள்ள முடியும்.

அத்தோடு இவற்றினை நேரில் பார்வையிட விரும்புவோர் 17.09.2025 ஆம் திகதி தொடக்கம் 27.09.2025 ஆம் திகதி வரை காலை 9.00 மணி தொடக்கம் மாலை 4.00 வரை பார்வையிடலாம் என்பதனை அறியத்தருகின்றோம்.

குறிப்பு : ஏலத்தில் பெற்றுக் கொண்ட பொருட்களுக்கு ஏலதாரர்கள் தாங்கள் கோரிய தொகையினை அன்றைய தினமே செலுத்தி பெற்றுக்கொண்ட வாகனங்களினையோ, இயந்திரங்களினையோ அல்லது பொருட்களினையோ உடன் இல்ல வளாகத்திலிருந்து வெளிக்கொண்டு செல்லுதல் வேண்டும் என்பதோடு, குறித்த ஏல விற்பனை தொடர்பில் எமது ஏலக் குழுவின் தீர்மானமே இறுதியானதாக இருக்கும் என்பதனையும் அறியத்தருகின்றோம்.

வாகனங்கள் விபரம்

1. உந்துருளி (Motor Bike) - 04
2. உழவு இயந்திரம் - 04
3. உழவு இயந்திர கலப்பை - 01
4. றொட்டப்பிற் கலப்பை - 04
5. லான் மாஸ்ரர் - 01

**தொடர்பு முகவரி:**
**ச.மோகனபவன்,**
**தலைவர்**
**மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லம்**
**ஜெயந்திநகர், கிளிநொச்சி**
**தொலைபேசி இலக்கம்: 0773240950 / 0214923118**

(CS 46004) E

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இந்தியாவிலிருந்து எடுத்துவரப்பட்ட விக்கிரகங்கள் கதிர்காமத்தில் பிரதிஷ்டை


யாழ்ப்பாணம், செப்.16

இந்தியாவிலிருந்து எடுத்துவரப்பட்ட முருகன், வள்ளி, தெய்வானை சமேதர விக்கிரகங்கள் வழிபாட்டுக்காக கதிர்காமத்தில் கடந்த சனிக்கிழமை பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளன.

இந்த விக்கிரகங்கள் தஞ்சாவூரில் வடிவமைக்கப்பட்டு தமிழ்நாடு, காஞ்சி மற்றும் ஆறுபடை வீடுகளில் பூஜை நடத்தப்பட்டு கடந்த ஜனவரி மாதம் கட்டுநாயக்க விமானநிலையம் ஊடாக இலங்கைக்குக் கொண்டுவரப்பட்டன.

யாழ்ப்பாணத்தில் உள்ள மாவைக்கந்தன் ஆலயத்துக்கு எடுத்து வரப்பட்டு கடந்த ஓகஸ்ட் 29ஆம் திகதி மாவிட்டபுரத்திலிருந்துபுறப்பட்ட முருகப்பெருமான் வன்னிப் பெருநிலப்பரபினூடாகத் திருக்கேதீஸ்வரம் சென்றடைந்து பூஜை வழிபாடுகள் இடம்பெற்றன. அதைத்தொடர்ந்து மட்டக்களப்புக்குச் சென்றடைந்து அங்கு பிரசித்தபெற்ற முருகன் ஆலயங்களில் பூஜை வழிபாடுகள் இடம்பெற்று பாணந்துறை, களுத்துறை மற்றும் காலியில் உள்ள முருகன் கோயில்களில் பூஜைகளுடன் கதிர்காமத்துக்குச் சென்றடைந்தார். அங்கு முருகப்பெருமானை மகாநாயக்கர்கள் வரவேற்று பிரதிஷ்டை செய்தனர். (ச-27)

## ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம் 01 • 09 • 1940

மறைவு 28 • 08 • 2024

### அமரர் கணபதிப்பிள்ளை பத்மநாதன்

திதி: ஆவணி மாத தேய்பிறை தசமி (16.09.2025)

கண்ணுக்கு ஒளியாய் நெஞ்சத்தில்
நிலையாய் என்றும் எங்களோடு
எங்களின் இறைவனாய் என்றும்
எங்களை வழிநடத்த வணங்குகின்றோம்.
நீங்கா நினைவுகளுடன்...

பிள்ளைகள்
லவக்குமாரன் குடும்பம்,
தனஞ்செயன் குடும்பம்,
தங்கை - விக்னேஸ்வரி
076 467 0112

CCTMS ஒழுங்கை,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

(CS/59361) J-1

## மரண அறிவித்தல்



தோற்றம் 16 • 08 • 1953

மறைவு 15 • 09 • 2025

### அல்பிரட் கிறிஸ்ரியன் றபாயேல் ராஜன் (ராசா)

கரம்பொனைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் கண்டி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட அல்பிரட் கிறிஸ்ரியன் றபாயேல் ராஜன் (ராசா) அவர்கள் நேற்று (15.09.2025) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான S.M அல்பிரட்-மேபிள் அல்பிரட் தம்பதியரின் அன்பு மகனும், வசந்தி (UK), சாந்தி (UK), வேந்தக்கோன் (UK), காலஞ்சென்ற கொன்சி மற்றும் அருட்சகோதரி.ஞானதர்சினி (தமிழ்மொழி மூல இணைப்பாளர், சென் பெனடிக்ற் கல்லூரி-கொழும்பு), மரீனா (UK), அருட்சகோதரி.அஞ்சலிக்கா (அதிபர்-புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம்,யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற ஜெயசீலன் மற்றும் அருமைநாயகம், நிம்மி, காலஞ்சென்ற எரிக் டரன் ஆகியோரின் மைத்துனரும், ஜெயச்செல்வி, காலஞ்சென்ற அன்ரனி மற்றும் விக்ரர், காலஞ்சென்ற சத்தியன் மற்றும் உதயச்செல்வி, பிரியதர்ஷினி, டறியோ, தூத்திகா, தர்சிகா ஆகியோரின் அன்பு மாமனாரும், தமிழ்ச்செல்வன், தமிழ்வேந்தன் ஆகியோரின் பெரிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் பார்வைக்காக இன்று (16.09.2025) செவ்வாய்க்கிழமை வைற் ஹவுஸ் மலர்ச்சாலையில் காலை 07.00 மணி முதல் வைக்கப்பட்டு பிற்பகல் 03.00 மணிக்கு யாழ்ப்பாணம் புனித திருமுழுக்கு யோவான் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு அதனைத் தொடர்ந்து பூதவுடல் நல்லடக்கத்திற்காக கரம்பொன் புனித செபஸ்தியார் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லபபட்டு நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்

தகவல்:
அருட்சகோதரி ஞானதர்சினி.

## 4 ம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் : 15.10.1994 மறைவு : 01.09.2021

### அமரர் நிரோஷி புஸ்பகுமார்

அன்பிற்கும் பண்பிற்கும் பாசத்திற்கும்
உரிமையுடைய அன்பு மகளே!
ஆண்டுகள் நான்கு சென்று விட்டன—ஆம்
ஆண்டுகள் தான் சென்றது உன் நினைவுகளும்
உன் கனவுகளும் அழியவில்லை
காலை உதித்த சூரியன் போலவும்
சேற்றில் முளைத்த செந்தாமரை போலவும்
ஒவ்வொரு விடயங்களும் நடந்தேறிக் கொண்டிருக்கிறது
இப்புவியில் நடக்கும் ஒவ்வொன்றுக்கும்
காலம் பதில் சொல்லும்
அதுவரை காத்திருப்போம் உன் கனவுகளுக்காக........

இல.651/13, நாவலர் வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

என்றும் உங்கள் நினைவுகளுடன்
அம்மா, அப்பா, பிள்ளைகள்,
அண்ணன்மார், அண்ணிமார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம்
27 . 03 . 1952



மறைவு
15 . 09 . 2025

## மேரி ஜெயராணி ஞானப்பிரகாசம்

பழைய பூங்காவீதி சுண்டிக்குளி யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கிருபா என்று அன்பாக அழைக்கப்படும் மேரி ஜெயராணி ஞானப்பிரகாசம் அவர்கள் நேற்று (15.09.2025) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செனட்டர் நல்லையா - மேரிமெக்ற்ரலின் தம்பதியரின் அன்பு புதல்வியும், காலஞ்சென்ற நல்லையா அருளானந்தம் - மேரிபேர்ணடேற் தம்பதியரின் மருமகளும், அன்ரன் ஞானப்பிரகாசம் (இ.மி.ச மின் அத்தியட்சகர் ஓய்வுநிலை) அவர்களின் அன்பு மனைவியும், A.G.பிறிற்றோ வினோதன் (லண்டன்), வேர்ஜினியா வினோதினி (இலங்கை வங்கி, கைதடி) ஆகியோரின் அன்புத் தாயாரும், ஜெசிக்கா (லண்டன்), துஸ்யந்தன் (முகாமையாளர் சனச அபிவிருத்தி வங்கி, வவுனியா) ஆகியோரின் மாமியாரும், ஜெயதேவி (பவா), காலஞ்சென்றவர்களான ஜெயக்கொடி, ஜெயமலர் ஆகியோரின் சகோதரியும், எஸ்ரா, கஸ்பார், லூக்கா, மரியோன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (17.09.2025) புதன்கிழமை பிற்பகல் 02.30 மணியளவில் அவரது இல்லத்தில் இருந்து எடுத்துச்செல்லப்பட்டு யாழ் புனித மரியன்னை பேராலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு புனித மரியன்னை பேராலய துயிலும் இல்லத்தில் நல்லடக்கம் செய்து வைக்கப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

அருள் யோ றோஸ் வாசா
இல. 41 பழைய பூங்கா வீதி,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.

தகவல்: அன்ரன் ஞானப்பிரகாசம்
கணவர்
021 222 9143, 077 440 9201
077 717 1655



வலுவூட்டல் வேலைத்திட்டத்துக்கு தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகளை உளரீதியாக வலுப்படுத்தும் நிகழ்வு தென்மராட்சிப் பிரதேச செயலக சமுர்த்திப் பிரிவினரால் பிரதேச செயலக மகாநாட்டு மண்டபத்தில் அண்மையில் நடத்தப்பட்டது. பிரதேச செயலாளர் எவ் .சீ.சத்தியசோதி தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், சமுர்த்தி முகாமையாளர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், பயனாளிகள் ஆகியோர் கலந்துகொண்டனர். வளவாளராக மாவட்டச் செயலக உளவளத்துணை உத்தியோகத்தர் விளக்கமளித்தார். (எ-25,9)



பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலயத்தின் தேர்த்திருவிழா கடந்த சனிக்கிழமை பக்திபூர்வமாக இடம்பெற்றது. மறுநாள் ஞாயிற்றுக்கிழமை பெருமாள், மஞ்சத்தில் திருவடிநிலை கடற்கரையில் எழுந்தருளி அங்கு தீர்த்தோற்சவம் இடம்பெற்றது. (எ-25-17)



கிளிநொச்சி உருத்திரபுரம் உழவர் ஒன்றிய விளையாட்டுக் கழகம் மற்றும் சன சமூக நிலையத்தினரின் நெறிப்படுத்தலில் அமரர் முருகேசு புராசக்தியின் முதலாம் ஆண்டு நினைவாக இரத்த தான முகாம்கடந்த சனிக்கிழமை நடைபெற்றது. இதன் போது குருதி வழங்கியோருக்கு பயன் தரு மரக்கன்றுகள் வழங்கப்பட்டன. (சு25,113)



பளை நகர் இரட்டைக்கேணி கண்ணகை அம்பாள் கோவிலுக்கு இரட்டைத் தீர்த்தக்கேணிகளை மீள அமைப்பதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு கோவில் திருவிழாவின்14 ஆம் நாள் உற்சவமான கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பித்துவைக்கப்பட்டது. (ச-25,9)

வேலணைப் பிரதேச செயலக பிரதேச சிறுவர் பாதுகாப்பு அலகினால் வேலணை சரஸ்வதி வித்தியாலயம் மற்றும் ஜே/33 கிராம சேவையாளர் பிரிவில் சிறுவர் பாதுகாப்புத் தொடர்பான விழிப்புணர்வு கடந்த வியாழக்கிழமை நடத்தப்பட்டது. நிகழ்வில் பிரதேச சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் வளவாளராகக் கலந்துகொண்டார். (ச-25,9)



வேலணைப் பிரதேச செயலக சமூக சேவைகள் அலகின் ஏற்பாட்டில் முதியோர்களுக்கான மருத்துவமுகாம் பிரதேச செயலர் த. அகிலன் தலைமையில் சரவணை தேவபுரம் ஸ்ரீசுப்பிரமணிய சுவாமி கோவில் மண்டபத்தில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது . (ச-25,9)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சந்நிதியான் ஆச்சிரமத்தால் உதவிகள் வழங்கிவைப்பு

யாழ்ப்பாணம், செப்.16

சந்நிதியான் ஆச்சிரம நிர்வாகத்தினரால் மூன்று இலட்சத்து 10 ஆயிரம் ரூபா பெறுமதியான உதவிகள் கடந்த சனிக்கிழமை புத்தளத்தில் வழங்கிவைக்கப்பட்டுள்ளன. புத்தளம் இந்து மத்திய கல்லூரியின் கோரிக்கைக்கமைவாக அப்பாடசாலையில் தரம் 1 முதல் தரம் 5 வரை கல்வி பயிலுகின்ற 200 மாணவர்களுக்கு ஒரு இலட்சத்து 60 ஆயிரம் ரூபா பெறுமதியான சில்வர் உணவுப்பெட்டிகள் வழங்கிவைக்கப்பட்டன. புத்தளம் கல்பிட்டி வீதி, அம்மா தோட்டத்தில் அமைந்துள்ள ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயத்தின் கோரிக்கைக்கமைவாக புதிய கட்டடக் கட்டுமானப் பணிகளுக்காக ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபா நிதி ஆலய நிர்வாகத்திடம் வழங்கப்பட்டது. (ச-41-66)

## சேதனப் பசளை தயாரிப்பு அங்குரார்ப்பண நிகழ்வு

சாவகச்சேரி, செப். 16

மிருசுவில் உசன் இராமநாதன் மகா வித்தியாலய பழைய மாணவர் சங்கத்தின் நிதி அனுசரணை மற்றும் நிபுணத்துவ ஆலோசனையுடன் சேதன பசளை தயாரிப்பது தொடர்பான செயற்றிட்டத்துக்கான அங்குரார்ப்பண நிகழ்வு கடந்த புதன்கிழமை நடைபெற்றது. நிகழ்வில் விருந்தினராக ஐக்கிய இராச்சியத்தில் இருந்து வருகை தந்த எந்திரி எஸ். மகேஷ் கலந்துசிறப்பித்தார். (ச-25, 9)





சுன்னாகம் வாழ்வக நிறுவனத்தின் ஸ்தாபகர் கலாநிதி அன்னலட்சுமி சின்னத்தம்பி நினைவுநாளும் நினைவுப்பேருரையும் நிகழ்வு வாழ்வகத் தலைவர் ஆறுமுகம் ரவீந்திரன் தலைமையில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது. நிகழ்வில் யாழ். மாவட்டச் செயலர் ம. பிரதீபன் பிரதம விருந்தினராகவும், வலிகாமம் தெற்குப் பிரதேச சபையின் உப தவிசாளர் செ.உதயகுமாரன், யாழ்.மாவட்டச் சமூக சேவை உத்தியோகத்தர் சுப்பிரமணியம் வரதபாஸ்கரன், தொழிலதிபர் தோமஸ் கிறிஸ்ரி செல்வராஜன், சுன்னாகம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எம்.எவ்.எம்.பிர்டவுஸ் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொண்டனர். (ச-25,66)



## புதிய நிர்வாகம் தெரிவு

அளவெட்டி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் புதிய நிர்வாகத் தெரிவு கடந்த ஞாயிற்றுக்கிழமை அளவெட்டியில் அமைந்துள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் நடைபெற்றது. யாழ்.மாவட்டக் கூட்டுறவுத் திணைக்கள மாவட்டக் கூட்டுறவு உத்தியோகத்தர் இ.விஜயமோகனராசா, சிரேஷ்ட கூட்டுறவு உத்தியோகத்தர் ஈ.எஸ்.சிறிதரன் மற்றும் சங்க கூட்டுறவுச் சங்க அபிவிருத்தி உத்தியோகத்தர் இ.தனுசன் ஆகியோரின் இணைத் தலைமையில் நடைபெற்றது. இதன்போது இரகசிய வாக்கெடுப்பின் மூலம் புதிய நிர்வாகத்தினர் தெரிவு செய்யப்பட்டனர். (ச-66)

## 3 சக்கரச் சைக்கிள் வழங்கிவைப்பு

முல்லைத்தீவு, செப்.16

இறுதி யுத்தத்தின்போது தனது கால்களை இழந்த ஒருவருக்கு மூன்று சக்கர சைக்கிள் வழங்கிவைக்கப்பட்டது.

ஜேர்மனியில் வசிக்கும் ஜெயமாறன் லோஜினி தம்பதிகளின் 24ஆவது திருமணநாளை முன்னிட்டு அவர்களின் 75 ஆயிரம் ரூபா நிதிப் பங்களிப்பில் கனக செல்லா அறக்கட்டளை மன்றம் ஊடாக குறித்த புதிய சைக்கிள் வழங்கிவைக்கப்பட்டது. (ச66,40)



## நூல் வெளியீடு

முல்லைத்தீவு, செப்.16

முல்லைத்தீவு விசுவமடு மகாவித்தியாலய கணிதப்பிரிவு உயர்தர மாணவன் தவயோகன் தர்சாந்தின் அறிவியல் சார்ந்த நூலான "வெண்வெளி யுத்தம்" என்ற நூல் வெளியீட்டு நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை விசுவமடு மத்தி சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெற்றது. வண.ரீ.எஸ்.யோசுவா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக புதுக்குடியிருப்புக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் சி.பாஸ்கரன், சிறப்பு விருந்தினராக முல்லைத்தீவு மாவட்டச் செயலக உதவி மாவட்டச் செயலாளர் கேகிதா லிசோ மற்றும் மு/விசுவமடு மகா வித்தியாலய அதிபர் நடராசா கருணாகரன், மு/கோம்பாவில் விக்கினேஸ்வர வித்தியாலய அதிபர் யோகேஸ்வரன் மகேஸ்வரன், மூத்த கலைஞரும் சமூகச் செயற்பாட்டாளருமான அன்னலங்கம் சண்முகலிங்கம், திறன்விருத்தி நிலையம் விசுவமடு மத்திய சனசமூக நிலைய இணைப்பாளர்(நூலகர்) றயூலா திருச் செல்வன், படைப்பாளர் தங்கராசா சாளினி (நிலாமகள்), பிரதேச மூத்த படைப்பாளருமான கலாபூஷணம் நடராசா இராமநாதன், பன்முக எழுத்தாளரும் அறிவிப்பாளருமான ந.சிவசுப்பிர மணியம், பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், எழுத்தாளர்கள், பிரதேச பொது அமைப்பு சார்ந்தோர், பாடசாலை மாணவர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ச-41-113)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொழும்புக்குத்...

பொதுஜன பெரமுன அறிவித்துள்ளது. கொழும்பில் நீண்டகாலமாகத் தங்கியிருந்த அரச சொகுசு மாளிகையில் இருந்து வெளியேறியுள்ள மஹிந்த, தற்போது தனது சொந்த ஊரான தங்காலை கால்டன் இல்லத்தில் தங்கியுள்ளார். மஹிந்த ராஜபக்ச மீண்டும் கொழும்பில் குடியேறவுள்ளார் என்று அண்மைக்காலமாகத் தகவல்கள் வெளியாகிவருகின்றன. இவ்வாறான பின்னணியிலேயே, அந்தத் தகவல்களை பொதுஜன பெரமுன நிராகரித்துள்ளது.

மஹிந்த ராஜபக்ச தனது சொந்த ஊரில் மகிழ்ச்சியாக வாழ்ந்துவருகின்றார். அவரை ஒவ்வொருநாளும் பல நூறு மக்கள் சந்தித்துவருகின்றனர். ஆதலால், மீண்டும் கொழும்புக்குத் திரும்புவது தொடர்பில் மஹிந்த தீர்மானிக்கவில்லை. ஆனால், கொழும்புக்கு வருமாறு மஹிந்தவுக்குப் பல தரப்பினரும் அழைப்பு விடுத்து வருகின்றனர் என்றும் பொதுஜன பெரமுன கூறியுள்ளது.

உயர்மட்ட சந்திப்புகளை நடத்துவதற்காக மஹிந்த கொழும்புக்குப் பயணமாக வேண்டிய தேவைகள் வரும். அதன் பின்னர் அவர் மீண்டும் தங்காலைக்கே திரும்பிவிடுவார் என்று பொதுஜன பெரமுன மேலும் குறிப்பிட்டுள்ளது. (அ-ம-44)

## ஒதுக்கீட்டுச்...

பாகக் கருதப்படும். அதன்பின்னர் வரவு - செலவுத் திட்டம் நவம்பர் மாதம் 7ஆம் திகதி நிதி அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதியால் சபையில் முன்வைக்கப்பட்டு, அவரின் பாதீட்டு உரை இடம்பெறும். இது இரண்டாம் வாசிப்பாகக் கருதப்படும்.

வரவு - செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்புமீதான விவாதம் நவம்பர் 8ஆம் திகதி முதல் 14ஆம் திகதி வரை நடைபெறும். 14ஆம் திகதி மாலை இரண்டாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பு நடத்தப்படும்.

பாதீட்டில் அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீடு தொடர்பான குழுநிலை விவாதம் (மூன்றாம் வாசிப்பு) நவம்பர் 15ஆம் திகதி முதல் டிசம்பர் 5ஆம் திகதிவரை நடைபெறும். பாதீடு மீதான இறுதி வாக்கெடுப்பு 5ஆம் திகதி மாலை 6 மணிக்கு நடத்தப்படவுள்ளது.

நாடாளுமன்றம் வழமையாக 9.30 மணிக்கே கூடும். எனினும், பாதீட்டு கூட்டத்தொடர் நடைபெறும் நாட்களில் காலை 9 மணிக்கு சபையை கூட்டுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

## 'லஞ்ச்சீற்'...

முதல் லஞ்ச்சீற் பயன்பாட்டை நிறுத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை நகரசபை மண்டபத்தில் பருத்தித்துறை நகரசபையின் தவிசாளர் வின்சன் டீ போல் டக்ளஸ் போல் தலைமையில் நகர வர்த்தகர்களுடன் நேற்றுக் கலந்துரையாடல் இடம்பெற்றது. இதன்போது மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களுக்கு அமையவே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இந்த நடைமுறையை உணவகங்கள் இறுக்கமாகப் பின்பற்றவேண்டும். இந்த விடயம் தொடர்பில் கண்காணிப்பு இடம்பெறும் என்று பருத்தித்துறை நகரசபைத் தவிசாளர் தெரிவித்துள்ளார். (அ-ம-100)

## தேர்தல்...

நேற்று நடைபெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

30 வருடகால போரை முடிவுக்குக் கொண்டுவந்த பிறகு வடக்கு, கிழக்கு மக்களுக்கு அவர்களுக்குரிய பிரதிநிதிகளை தெரிவு செய்வதற்குரிய வாய்ப்பை மஹிந்த ராஜபக்ச ஏற்படுத்திக் கொடுத்தார். தோல்வியெனத் தெரிந்தும் வடக்கு மாகாணசபைத் தேர்தலை நடத்தி, சபையை அமைத்தார்.

ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஜே.வி.பி. என்பன இணைந்தே 2015ஆம் ஆண்டில் நல்லாட்சியை உருவாக்கின. பெரமுனவின் எழுச்சிக்கு அஞ்சியே இந்த முடிவு எடுக்கப்பட்டது. அதன் பின்னர் மாகாணசபைத் தேர்தலை பிற்போடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டது. மாகாண சபைத் தேர்தல்கள் பிற்போனமைக்கு ஜே.வி.பி.யும் பிரதான காரணம். ஜே.வி.பி. அதற்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் ஆதரவு தெரிவித்து வருகின்றது - என்றார். (அ-ம-44)

## தென்னிலங்கை...

இது தொடர்பில் அவர்கள் நேற்று மேலும் தெரிவித்ததாவது:-

இந்திய அரசாங்கத்தின் நிதி உதவியில் பருத்தித்துறை துறைமுகத்தை அபிவிருத்தி செய்வது தொடர்பில் தற்போது நடவடிக்கைகள் இடம்பெற்றுவருகின்றன. இந்தத் துறைமுகம் ஆழப்படுத்தப்பட்டு அபிவிருத்தி செய்யப்பட்டால், அதனால் எங்களுக்கு பாதிப்புத்தான் ஏற்படும். மாறாக எந்த நன்மையும் ஏற்படப்போவதில்லை. துறைமுகம் ஆழப்படுத்தப்பட்டால், அதற்கு மேற்குப் பக்கமாக ஏற்படும் கடலரிப்புக்கு முகம்கொடுத்து அழிவைச் சந்திக்கும் முதல் கிராமமாக சுப்பர்மடம் மீனவக் கிராமம் மாற்றம் பெறும்.

2018ஆம் ஆண்டு ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியில் இந்தத் துறைமுகத்தைச் சீரமைக்க நடவடிக்கை எடுத்தனர். அதனால், ஏற்படும் பாதிப்புகளைச் சுட்டிக்காட்டி நாங்கள் எதிர்ப்பை வெளிப்படுத்தியதைத் தொடர்ந்து, அந்தத் திட்டத்தைக் கைவிட்டனர். தற்போது, எமக்குத் தெரியாமல், எம்முடன் கலந்துரையாடாமல் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ளவுள்ளனர். இதற்காக கள ஆய்விலும் ஈடுபட்டுவருகின்றனர். இந்த விடயங்கள் மிகுந்த அதிர்ச்சியைத் தருகின்றன.

கப்பல்கள் நங்கூரம் இடுவதற்காகவும், நீண்ட நாள் படகுகள் தங்குவதற்காகவுமே துறைமுகம் ஆழப்படுத்தப்படவுள்ளது. அதனால் எமக்கு என்ன பயன்? எமக்கு எந்தப் பயனும் இல்லை. ஏனெனில் நாங்கள் சிறிய படகுகள் மூலம் அன்றாடம் மீன்பிடிக்கும் மீனவர்கள்.

மயிலிட்டித் துறைமுகத்தில் உள்ளூர் மீனவர்கள் புறக்கணிக்கப்பட்டு, தென்னிலங்கை மீனவர்களே ஆதிக்கம் செலுத்திவருகின்றனர். தமது துறைமுகத்தை மீட்பதற்கு மயிலிட்டி மீனவர்கள் இன்று பெரும்பாடு படவேண்டிய நிலை உள்ளது. அவ்வாறான நிலையே எமக்கும் ஏற்படும் என அஞ்சுகின்றோம் - என்றார். (அ-ம)

## ஹெரோய்னுடன்...

உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். யாழ்ப்பாணம் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத்தகவலின் அடிப்படையில், யாழ்ப்பாணம் பொலிஸ் நிலைய போதைத் தடுப்புப் பிரிவினரால் இந்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்கள் 18, 19 மற்றும் 21 வயதுடையவர்கள். அவர்களிடம் இருந்து 15 போதை மாத்திரைகள் மற்றும் 50 மில்லிகிராம் ஹெரோய்ன் என்பன மீட்கப்பட்டுள்ளன. விசாரணைகளின் பின்னர் சந்தேகநபர்களை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (அ-ம-27)

## உறுமிய...

மடக்கிப்பிடிக்கப்பட்டுள்ளன. பொதுமக்கள் நீண்டகாலமாக வழங்கிய முறைப்பாடுகளுக்கு அமைய, வவுனியா வைரவப் புளியங்குளம் பகுதி, பூங்கா வீதி ஆகியவற்றில் பொலிஸால் நேற்று விசேட நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தனர். இதன்போதே, அந்த மோட்டார்சைக்கிள்கள் மடக்கிப்பிடிக்கப்பட்டு, பொலிஸாரின் கட்டுப்பாட்டில் கொண்டு செல்லப்பட்டுள்ளன. மோட்டார்சைக்கிள்களைச் செலுத்தியோருக்கு எதிராக நடவடிக்கைகள் இடம்பெற்றுவருகின்றன. (அ-ம-110-18)

## தமிழ்...

சிறையில் வாடும் தமிழ் அரசியற்கைதியான இராமச்சந்திரன் குடும்பத்தினர், குரல் அற்றவர்களின் குரல் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் மு.கோமகன் ஆகியோர் கண்டி போகம்பர தும்பர சிறைச்சாலைக்கு நேரடியாகச் சென்று கைதிகளைப் பார்வையிட்டனர்.

இந்தச் சந்திப்பின்போது தமிழ் அரசியற்கைதிகளின் விடுதலையை முன்னிட்டுத் தமிழர் தாயகத்திலும், புலம்பெயர் தேசங்களிலும் முன்னெடுக்கப்பட்ட விடுதலை நீர் சேகரிப்புக்கு வலுச்சேர்க்கும் வகையில், விடுதலை நீரை ஆனந்த சுதாகரன், இராமச்சந்திரன் ஆகியோர் குரலற்றவர்களின் குரல் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் கோமகனிடம் வழங்கிவைத்தனர். (அ-ம-66)

## தியாகதீபம்...

1987ஆம் ஆண்டு செப்ரெம்பர் 15ஆம் திகதி ஐந்து அம்சக் கோரிக்கையை முன்வைத்து உணவுத் தவிர்ப்பை ஆரம்பித்த திலீபன், 1987ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 26ஆம் திகதி சனிக்கிழமை காலை 10.48 மணிக்கு உயிர்நீத்தார். திலீபனின் 38ஆவது ஆண்டு நினைவேந்தல் நாள் நிகழ்வுகள் நேற்றுத் திங்கட்கிழமை தமிழர் தாயகத்திலும், புலம்பெயர் தேசங்களிலும் உணர்வெழுச்சியுடன் ஆரம்பமாகியுள்ளன.

**நல்லூர்**

நல்லூரில் திலீபன் உணவுத் தவிர்ப்பில் ஈடுபட்ட இடத்தில் அஞ்சலி நடைபெற்று, தொடர்ந்து நல்லூரான் ஆலய பின் வீதியில் அமைந்துள்ள திலீபன் நினைவிடத்தில் நினைவேந்தல் இடம்பெற்றது. இதன்போது பொதுச்சுடர் ஏற்றப்பட்டு மலர்மாலை அணிவிக்கப்பட்டு மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

அதனைத் தொடர்ந்து முற்பகல் 10.30 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை திலீபனின் நினைவுத்தூபிக்கு அருகில் தற்காலிக கொட்டகையில் அடையாள உணவுத் தவிர்ப்புப் போராட்டமும் நடத்தப்பட்டது.

**சுப்பர்மடம்**

பருத்தித்துறை - சுப்பர்மடம் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க வளாகத்தில் அமைக்கப்பட்ட விசேட பந்தலில் தியாக தீபம் திலீபனின் திருவுருவப்படம் வைக்கப்பட்டு சுடரேற்றப்பட்டு மாலை அணிவிக்கப்பட்டு மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது. தொடர்ந்து 12 தினங்கள் அங்கு அஞ்சலி நிகழ்வுகள் நடத்துவதற்கு ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

**வேலணை**

திலீபனின் நினைவேந்தல் நிகழ்வின் முதலாம் நாள் நிகழ்வுகள், தீவகம் நினைவேந்தல் குழுவின் ஏற்பாட்டில் வேலணை வங்களாவடி சந்தியில் அமைந்துள்ள பொது நினைவுத்தூபியில் நடைபெற்றது. இதன்போது பொதுச்சுடர் ஏற்றப்பட்டு தியாகதீபம் திலீபனின் திருவுருவப்படத்துக்கு மலர்மாலை அணிவிக்கப்பட்டு மலரஞ்சலியும் செலுத்தப்பட்டது.

வேலணைப் பிரதேசசபையின் உறுப்பினர்கள், வர்த்தகர்கள், பொதுமக்கள் என பலரும் நிகழ்வில் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தினர்.

**கள்ளப்பாடு**

முல்லைத்தீவு - கள்ளப்பாடு பகுதியில், நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரனின் மக்கள் தொடர்பகத்திலும் நினைவேந்தல் நிகழ்வுகள் இடம்பெற்றன. மாவீரர் ஒருவரின் தாயாரான செ.தவராணி ஈகைச்சுடரை ஏற்றி நினைவேந்தலை ஆரம்பித்துவைத்தார். தொடர்ந்து தியாகதீபம் திலீபனின் திருவுருவப்படத்துக்கு மலர்தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது. (அ-ம-110-100-26-66-113)

## திலீபனின்...

நல்லூரில் ஆவணக்காட்சி இடம்பெற்றுவருகின்றது.

தியாகதீபம் திலீபன் நினைவேந்தல் குழுவினரால், திலீபனின் நினைவுத் தூபியைச் சூழவுள்ள பகுதிகளில் திலீபனின் தியாகப் பயணத்தை உள்ளடக்கிய சம்பவங்களையும், படங்களையும் கொண்டதாக இந்த ஆவணப்படுத்தல் காட்சிகள் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன. (அ-ம-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கிளிநொச்சி, முழங்காவில் மகாவித்தியாலய க.பொ.த உ/த மாணவர்களின் வருடாந்த ஒன்றுகூடல் அதிபர் சிவானந்தி பரதன் தலைமையில் கடந்த வியாழக்கிழமை பாடசாலையின் பிரதான மண்டபத்தில் இடம்பெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கல்லூரியின் முன்னாள் உதவி அதிபரும் மட்டக்களப்பு தேசிய கல்வியியற் கல்லூரி விரிவுரையாளரும் அகில இலங்கை சமாதான நீதிவானுமாகிய எம்.ஷாந்தன் சத்தியகீர்த்தி மற்றும் அயற்பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர். (எ-41-159)

## மதிப்பளிப்பு நிகழ்வு

சாவகச்சேரி, செப்.16

2025ஆம் ஆண்டுக்கான தேசிய வாசிப்புமாத நிகழ்வையொட்டி சாவகச்சேரி நகரசபையின் மீசாலை பொதுநூலகத்தை தினசரி பயன்படுத்தியவர்கள் தேசிய வாசிப்புமாத இறுதிநாள் நிகழ்வில் மதிப்பளிக்கப்படவுள்ளனர்.

பொதுநூலகத்தைத் தினசரி பயன்படுத்திய மாணவர்கள் உட்பட வாசகர்கள் தமது பெயரை செப்டம்பர் 25ஆம் திகதிக்கு முன்னர் பதிவுசெய்யுமாறு நூலகர் அறிவித்துள்ளார். (எ-41-9)

மித்தெனியவில்

# சிக்கிய இரசாயனத்தில் ஐஸ் போதைப்பொருள்!

ஆய்வுகளில் கண்டறிவு

கொழும்பு, செப்.16

மித்தெனிய தோரயாயப் பகுதியிலுள்ள காணியொன்றில் புதைக்கப்பட்டிருந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்ட இரசாயனப் பொருள்களின் மாதிரிகளில் பெரும்பாலானவை ஐஸ் போதைப்பொருள் என்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச்சபையின் ஆய்வுகளில் இந்தவிடயம் கண்டறியப்பட்டுள்ளது. இது தொடர்பான அறிக்கை கடந்த வெள்ளிக்கிழமை மேல் மாகாண வடக்கு குற்றப்பிரிவினிடம் கையளிக்கப்பட்டுள்ளது. மித்தெனியப் பகுதியில் உள்ள காணியொன்றில் புதைக்கப்பட்டிருந்த நிலையில் கடந்த 5ஆம் திகதி குறித்த இரசாயனப் பொருள்கள் கண்டுபிடிக்கப்பட்டன. தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள திட்டமிட்ட குற்றச்செயல்களில் ஈடுபடும் குற்றவாளியான பெக்கோ சமனிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளுக்கமைய அவை கண்டெடுக்கப்பட்டன.

இதேவேளை, நெடோல்பிட்டிய மற்றும் கந்தானப் பகுதிகளில் கண்டுபிடிக்கப்பட்ட இரசாயனப் பொருள்களும் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டு வருவதாகவும், அடுத்த வாரம் அறிக்கைகள் ஒப்படைக்கப்படும் என்றும் ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை தெரிவித்துள்ளது. (எ-25-இ)

# ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸுக்குக் கடன் பத்திரங்களால் நெருக்கடி

கொழும்பு,செப்.16

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ், 175 மில்லியன் டொலர் பெறுமதி கொண்ட 7 வீத அரச உத்தரவாதம் பெற்ற கடன் பத்திரங்களை மறுசீரமைக்க முடியாத நிலையில் உள்ளது. இந்தக் கடன் பத்திரங்களை மீளமைப்பது சாத்தியமில்லை என்பதால், கடன் பத்திரங்களுக்கான பணத்தை ஸ்ரீ லங்கன் எயார்லைன்ஸ் முழுமையாகச் செலுத்த வேண்டிய நிலையில் உள்ளது.

நிறுவனம் வெளியிட்டுள்ள 175 மில்லியன் டொலர் கடன்பத்திரங்கள், தற்போது இரண்டாம் நிலை சந்தையில் டொலருக்கு 105 சதம் அளவில் வர்த்தக பரிமாற்றத்தைக்கொண்டுள்ளன. கடன் வழங்குநர்கள் 98 சதம் டொலரைக் கேட்கும் நிலையில், ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் 85 சத டொலரையே தர முடியும் என்று கூறியுள்ளமையால் பேச்சும் தோல்வியடைந்துள்ளது. நிறுவனத்துக்குப் பத்திரங்களை முழுவதுமாக திருப்பிச்செலுத்தும் திறன் இல்லை.

கடந்த பல ஆண்டுகளில் ஏற்பட்ட தொடர்ச்சியான நட்டங்களை ஈடுகட்ட, அந்தப் பத்திரங்களிலிருந்து பெற்ற பணம் பயன்படுத்தப்பட்டது. இந்த நட்டங்கள் 2 பில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு மேல் உள்ளன என்று ஸ்ரீ லங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்தின் தலைவரான சரத் கணேகொட தெரிவித்துள்ளார். (எ-க-இ)

# குடியிருப்புக்குள் புகுந்து யானைகள் அட்டகாசம்

மட்டக்களப்பு,செப்.16

மட்டக்களப்பு வாவியை ஊடறுத்து, எழுவாங்கரைப் பகுதியிலுள்ள புதுக்குடியிருப்புப் பிரதேசத்துக்குள் இரவுவேளையில் உள்நுழைந்து காட்டுயானைகள் அட்டகாசம் செய்கின்றன. யானைகள் வேலிகளை உடைத்துச் சேதப்படுத்தியும், பயன்தரும் வாழை, கரும்பு, மற்றும், விவசாயத் தோட்டங்களையும் நாசம் செய்து வருகின்றன. இதனால் குடியிருப்பு மக்கள், பெரும் அச்சமடைந்துள்ளனர். சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடன் நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும். இல்லையென்றால் தமது வாழ்வாதாரம் முற்றாகப் பாதிக்கப்படும் என்று மக்கள் தெரிவித்துள்ளனர். அண்மைக்காலமாக மட்டக்களப்பு மாவட்டத்தில் காட்டு யானைகளின் தாக்கத்துக்குள்ளாகி உயிரிழப்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-இ)

2027, 2026 A/L
Physics
T. Jinthujan
Personal / Group Classes
T.P: 076 603 4895
(CR/4020) J-1

# தோட்டத் தொழிலாளர் வேதனம்; இணக்கமின்றி இழுபறியில்!

கொழும்பு, செப்.16

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் வேதன விடயத்தில், உற்பத்தி அடிப்படையிலான வருமானப்பகிர்வு முறைக்கே, தங்களால் இணக்கம் தெரிவிக்க முடியும் என்று பெருந்தோட்ட நிறுவனங்களின் சம்மேளனத்தின் ஊடகப்பேச்சாளர் ரொசான் இராஜதுரை தெரிவித்துள்ளார்.

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் வேதன விவகாரம் தொடர்பான இறுதி நிலைப்பாட்டை எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 7ஆம் திகதி அறிவிக்கவேண்டும் என்று பெருந்தோட்ட நிறுவனங்களுக்கு அரசாங்கத்தால் கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் ஊடகவியலாளர்களால் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது கடந்த வாரம் துறைசார் அமைச்சருடன் இடம்பெற்ற பேச்சுவார்த்தையின்போது பெருந்தோட்டத் தொழிலாளர்களின் வேதனத்தை அதிகரிக்கமுடியாமைக்கான காரணம் குறித்து எடுத்துரைத்தோம். குறிப்பாக, தற்போது 100க்கு 25 சதவீத உற்பத்தி முறையிலான இலாபப்பகிர்வு வழங்கப்படுகிறது. இந்தநிலையில் உற்பத்தி அடிப்படையிலான இலாபப்பகிர்வு முறைமைக்கான திட்டங்கள் தொடர்பாக அறிவிக்க வேண்டும் என்று துறைசார் அமைச்சர் வலியுறுத்தியுள்ளார். இந்தத் திட்டம் தொடர்பாகப் பேச்சுவார்த்தை நடத்தி அரசாங்கத்திடம் யோசனை முன்வைக்கவுள்ளவோம்-என்றார். (எ-25

காணி விற்பனைக்கு உண்டு

யாழ் கோப்பாய் ராசபாதை வீதியில், Training college முன்பாக 22 பரப்பு காணி 20 அடி பாதையுடன் இரண்டு இரண்டு பரப்பாக பிரித்து விற்பனைக்கு உண்டு.

- குடியிருப்பு சூழல்
- நல்ல நீர்க் கிணறு
- செம்மண் தறைக்காணி
- பிரதான போக்குவரத்து சேவை பஸ் செல்லும் வீதி முன்பாக.

பார்வையிடும் நேரம்:- காலை 6.00 - மாலை 6.00 வரை

தொடர்புகளுக்கு:- விமல்

076 755 8606, 074 338 4481, 077 638 5683

## சிரமதானம்

சாவகச்சேரி, செப்.16

தென்மராட்சி பிரதேச அரசஅலுவலகங்களில் நேற்றுத் திங்கட்கிழமை பொதுமக்களின் பங்களிப்புடன் சிரமதானப்பணி முன்னெடுக்கப்பட்டது. மழைக்காலம் ஆரம்பித்துள்ளதால் டெங்கு, மலேரியா, நிமோனியா மற்றும் சிக்கன்குனியா போன்றவற்றை உருவாக்கக்கூடிய நுளம்பு வகைகளை உற்பத்தியாகாமல் தடுக்கும் நோக்குடன் சிரமதானப்பணிகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன. (எ-41-9)

## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், செப். 16

கோண்டாவில் இந்துக் கல்லூரியில் பரிசளிப்பு விழா நாளை புதன்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

கல்லூரி அதிபர் நடேசு தயாளன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக கலைத்துறை பேராசிரியர் ஆர்.சர்வேஸ்வரா கலந்து கொள்ளவுள்ளார். (ம-25)



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் ... 16.09.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org